போன் நெ. 15. விலை 2 அணு. REGD No. 4642

திராவிடநாடு

ஆண்டு சந்தா ரூ. 7—0—0

மலர் 13 | 27—3—55 | இதழ் 38

திருந்தாத நிலை—தெளிவுபெருத குறை

ஈழத்து அடிகள்

ஒரு பெரிய அழிவு நேரிட்டுவிடுமோ என்ற ஏக்கத்தோடு, என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்திருந்த நிலை.

கடும் புயலால் தாக்குண்ட ஒரு கப்பலுக்குள் இருந்த மக்கள், இனிக் கடலுள் மூழ்கி மடிவதைத் தவிர, வேறு வழியில்லை என்ற வருத்தத்தோடு இருந்த நிலை.

காற்றின் கனவேகத்தால் கடலில் இருந்த ஒரு பெரிய சுருமீன் கப்பலில் தூக்கி எறியய்பட்டதைக் கண்ட அந்த மக்கள், "நாம் கடலுள் மூழ்கி மடியும் தொல்லையிலிருந்து நம்மை விடுவிக்க வந்ததுபோல் இந்தச் சுருமீன் கப்பலுக்கே வந்துவிட்டதே! கடலில் விழுந்தபின்னராவது சிறிது நேரம் தத்தளித்துத் தடுமாறிக் கரையேற ஏதாவது வழி கிடைக்குமா என்ற முயற்சியாவது செய்துபார்க்க முடியும். ஆனல் இப்போது சுரு நம்மை அப்படியே விழுங்கிவிடவன்ருே போகிறது என்று எண்ணும்போதே உடம்பு உயிரற்ற நிலையை அடைந்துவிடுமோ" என்ற அச்சம் ஏற்பட்ட நிலை.

திடீரென்று புயல் நின்றுவிடுகிறது. கப்பலில் இருந்த சுருமீன் கடலுள் போய்விடுகிறது. கப்பல் கரையை அடைகிறது. உப்புக் கடலில் மாண்டுபோக இருந்த மக்கள் களிப்புக் கடலில் மூழ்கி மூழ்கி எழுகின்றனர்.

*

★

நடுக் கடலில் சென்றுகொண்டிருக்கும் கப்பலில் திடீரென்று ஒரு ஓட்டை ஏற்பட்டுத் தண்ணீர் உள்ளே நுழைகிறது.

இன்னும் சிறிது நேரத்தில் கப்பல் கடலுள் மூழ்கிவிடப்போகிறது.

கப்பலில் இருக்கின்ற மக்கள், இனிக் கரைகண்டு வீடுசேர முடியாது என்று எண்ணியதும் மூர்ச்சையாகி விடுகின்றனர்.

எதிர்பாராத விதமாக வேறு ஒரு கப்பல் அந்தப்பக்கமாக வருகிறது-இந்தக் கப்பலின் அவதியைக் காண்கிறது—காப்பாற்றுகிறது. காப்பற்றப்பட்டவர்கள் கரைகாண முடியாத களிப்புக் கடலில் மூழ்கிவிடுகின்றனர்.

*

இப்படியொரு நெருக்கடியான நிலை பதின்மூன்று பதினன்காம் நூற்றுண்டுகளில் நமது தமிழகத்துக்கும் ஏற்பட்டதாம்.

இந்த நெருக்கடியினின்றும் தமிழகத்தைக் காப்பாற்ற இரு பெரும் புரவலர்கள் புலவர் திலகங்களாகத் தோன்றினர்ராம்.

அந்த நேரத்தில் அவர்கள் இருவரும் தோன்றவில்லையென்ருல், தமிழக் நிலை என்னவாகியிருக்கும் என்பது சிந்தனைக்குக்கூட் எட்டாத ஒன்ரும்.

அந்த இருவரும் தமிழகத்துக்குச் செய்த பேருதவிகளைப் பாராட்டத் தமிழில் சொல்லே இல்லையாம்.

சொல்லுகிருர்! யாரென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? இதோ வந்து விடுவார். கல்கத்தாவில் இறங்கிக் காசிக்குப் போயிருக்கிருர்.

பர்மா, மலேயா, இந்தோசீன முதலான 'கீழ் நாடுகளுக்குச் சென்று கதா காலட்சேபம் செய்தால் மட்டும் போதாது — கல்லும் சுமந்துதான், கடவுள்நெறியை விளக்கியாகவேண்டுமென்ற இரங்கத்தக்க நிலைக்கு ஆளான நமது நண்பர் அரங்கநாதன், இப்பொழுது, தமிழ் நாடு அருள் நெறித் திருக்கூட்டத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி மகா சந்நிதானம் திருப்பெருந் திரு தெய்வசிகாமணி அருணசல தேசிக பரமாசார்ய சுவாமிகளாக மாறியிருப்பவர்தான், தம்முடைய மலேயாச் சொற்பொழிவுகளில் ஒன்றில் நாம் மேற்கூறிய நிகழ்ச்சியை வெளியிட்டிருக்கிருர்.

யாரந்த உற்ற காலத்துதவிய இரு பெரும் புலவராம் புரவலர்கள் என்பதையும், எவை அந்தப் பேரிடர்கள்? எப்படி அவை ஒழிக்கப்பட்டன என்பதையும் அறிய வேண்டுமென்ற ஆவலால் அனைவரும் தூண்டப்படுவர் என்பதை அறிய முடியாதவனல்ல நான்; இதோ அந்த விபரங்களையும் கூறிவிடுகிறேன்.

"தமிழகத்தில் சமய வாழ்க்கை சமுதாயத்திற்குச் சேவை செய்யாத நிலையில் விலகியிருந்தது."

கைத்தறி உடுப்போம், கண்ணீர் துடைப்போம்.

"அக்கொடிய நோய் பரவுமானால் தமிழர் நாகரிகமே சிதைந்திருக்கக் கூடும்."

"இப்பேராபத்து தமிழகத்திற்கு வராதிருப்பதற்காகச் சேக்கிழார் பெரிய புராணத்தை யாத்தார்."

குன்றக்குடி அடிகளார் கூறிய அந்த இருவரில் ஒருவர் பெரியபுராணம் பாடிய குன்றத்தூர்ச் சேக்கிழாராகும்.

இந்தச் சேக்கிழார் பெரியபுராணத்தைப் பாடியிராவிடில் தமிழர் நாகரிகமே சிதைந்திருக்கும் என்பது அருள் நெறித் தலைவரின் அசைக்க முடியாத அபிப்பிராயமாகும்.

சமய வாழ்க்கை சமுதாயத்திற்குச் சேவை செய்யாமல் விலகியிருந்தது. அதாவது சமயப்பற்றில் ஊறிக்கிடந்தவர்கள் சமுதாயத்தைக் கவனியாமல் இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டை இப்பொழுது ஸ்ரீலஸ்ரீ சந்நிதானமாக மாறியிருக்கும் முன்னாள் தோழர் அரங்கநாதன் அவர்கள் கடவுளன்பர்கள் மீது சுமத்துகிறார். இது, உண்மையிலேயே வரவேற்கக் கூடிய ஒன்றாகும்! தன்மதிப்பியக்கத்தவராகிய நாமும் இதே குற்றச்சாட்டைத் தான் பக்தர் குழாத்தின்மீது சுமத்திவருகிறோம். சமயவாதிகள் சமுதாயத்தோடு தொடர்புவைத்துக் கொள்வதில்லை — கடவுளைக் காப்பாற்றுவதிலேயே அவர்கள் கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள். எனவே அவர்கள் சமுதாயத்தில் இடம் பெற இலாயக்கற்றவர்கள் என்பது 'எமது' முடிவு.

ஆனால், சேக்கிழார் பெரியபுராணம் அருளிய பின்னர், இக்கொடியநோய், அதாவது, சமயவாதி சமுதாயவாதியோடு ஒத்துப்போகாத நிலை மாறிவிட்டது என்று குன்றக்குடியார் கூறுவதை நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

சமயம் (மதம்) தமிழ் நாட்டில் தலைகாட்டிய நாளிலிருந்து இன்று வரை, சமயவாதி சமுதாயவாதிகளைத் தன்னுடைய எதிரியாக நினைத்துச் செயலாற்றிவருவதையேநாம்காண்கிறோம். வெளிப்படையாக உண்மையைக் கூறவேண்டுமானால், சமயவாதி சமுதாயவாதி நல்வாழ்வு நடத்துவதையோ, பிறரை நல்வாழ்வில் இருக்கும்படி செய்வதையோ காணச் சகியாதவனாகவே இருந்து வருகிறான்.

சேக்கிழாரின் சமய—சமுதாய ஒற்றுமையின் விளக்கம் இருக்கிறதே, அது மிகவும் வேடிக்கையானதாகும். அதாவது, பசித்தவருக்கு உணவளித்தல், உடைகொடுத்தல், துணிவெளுத்தல் முதலான சமுதாயத் தொண்டுகள் சமய வாழ்வினரால் கையாளப் பட்டனவாம். இதனைச்சேக்கிழார் தான் முதன் முதலாகச் செய்து வைத்தாராம்.

சேக்கிழார் காலத்துக்கு முன் இருந்த தமிழ் மக்கள் பசித்தவருக்கு உணவு அளித்தனரா இல்லையா என்பதையல்ல நாம் இங்கு ஆராய்வது.

தமிழ் மக்களின் நாகரிகங்களில் தலைசிறந்து நிற்பது இட்டுண்பது ஒன்றுதான்.

ஆனால், சேக்கிழார் போன்ற சிறுமதியினர்தான் இந்த இட்டுண்ணும் சிறப்புக்கும் இழுக்குத்தேடி வைத்தனர். அதாவது நீறுபூசி, அக்கமணி அணிந்து, அரகரா சிவனே என்று கூறுபவர்கள் யாரோ அவர்களுக்கு மட்டுமே அன்னம் அளிப்பது என்ற சமயக்கொள்கை சேக்கிழாருக்கு முன் தமிழகத்தில் இருந்ததில்லை என்று அறுதியிட்டுக் கூற முடியும்.

பசித்துவந்தவன் பகைவனாய் இருந்தாலும் அவனுக்குச்சோறு போடுவது தான் தமிழரின் உயர்ந்த நாகரீகமாகும்.

இவன் நீறு அணியப்பட்டவனா? அவன் நாமம் சாத்தப்பட்டவனா என்று பார்த்துப் பசிப் பிணி தீர்க்கும் கொடியநோய்தமிழகத்தில் பரவியதற்குச் சமயவாதிகளின் சண்டாளச் செயல்களே காரணமாகும்.

சிவனடியார் யாராயினும் அவருக்கே அமுதளிப்பது என்ற விரதம் பூண்டொழுகிய இளையான்குடி மாறனும், யார் கோவணம் அணியவில்லை என்று பார்த்துக் கோவணம் தந்த அமர்நீதியும், சிவனடியார்க்கன்றி மற்றவர்க்குத் துணி வெளுத்துத் தருவதில்லை என்ற திருக்குறிப்புத் தொண்டரும், சிவனடியார்களுக்குத் திருவோடு தந்த திருநீலகண்டரும், பிற பெரியபுராண அடியார்களும் சிவமதமல்லாத பிறமதத்தினருக்கு யாதாவதொரு உதவி செய்தார்கள் என்று எடுத்துக்காட்ட முடியுமா? சிவமதத்தைத் தழுவாத—ஒப்புக்கொள்ளாத சமணர்களும், வைணவர்களும், பிறரும் சேக்கிழார் காலத்தில் தமிழகத்தில் இருந்திருக்கின்றனரே! இவர்களில் பலர் பெரியபுராண அடியார்களால் தாக்குண்ட வரலாறுகள் பல சேக்கிழாரின் செவ்விய நாவால் பாடப்பெற்றுள்ளனவே!

நாக்கறுத்த, மூக்கறுத்த, கண் இடந்த கதைகள் யாரால் பாடப் பெற்றன?

பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தையை உயர வீசி, அதற்கு நேராக வாள்பிடித்து அச் சிசுவை இருதுண்டாக்கிய கோட்புலியின் கதை யாரால் பாடப்பெற்றது?

பெற்ற குழந்தையைக் கொன்று கறிசமைத்த சிறுத்தொண்டனின் கதை யாரால் பாடப்பெற்றது?

சூதாடிப் பணம் சேர்த்துச் சிவத்தொண்டு செய்தவர், மனைவியின் தாலியை அறுத்துஅரன் பூசை செய்தவர் என்று எவ்வளவோ எடுத்துக் காட்டலாம் சேக்கிழார் புராணத்தில்.

இவையெல்லாம் தமிழர்தம் நாகரிகத்தைக் காப்பாற்றுவதற்காகச் சேக்கிழார் செய்த சேவைகள் என்று நமது குன்றக்குடியார் கூறுகிறார்.

இவற்றிற்கெல்லாம் சிகரம்வைத்ததுபோல் தமிழர் நாகரிகத்தைக் காப்பாற்றுவதற்காகச் சேக்கிழார் செய்த சேவை ஒன்று இருக்கிறதே! அது, என்றும்—எவராலும் மறக்கக் கூடிய ஒன்றன்று.

"இயற்பகை என்ற சிவனடியார் ஒருவர் தம்முடைய மனைவியை ஒரு பார்ப்பனருக்கு மனைவியாக்கினார்"

இந்த நிகழ்ச்சி இருக்கிறதே, இது, தமிழ்ப் பெரு மக்களின் நாகரிகத்தை எவ்வளவு அருமையாக சேக்கிழார் காப்பாற்றியிருக்கிறார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும் என்பது நமது குன்றக்குடியாரின் கூரிய அறிவுக்குத் தென்பட்ட உண்மைகள் பலவற்றுள் ஒன்றாயிருக்கலாம் என்று நம்மால் கருதவோ ஒப்புக்கொள்ளவோ முடியவில்லை. காரணம், அவர் பெற்ற அறிவும் உற்ற இடமும் அவரை அப்படியெல்லாம் பேசவைக்கிறதே என்றுதான் நாம் இன்னும் நம்புகிறோம். ஏனென்றால், அவரும் நாளடைவில் நம்மி (தன்மதிப்பியக்கத்தி)டம் வர இருப்பவர்கள் — முயற்சிப்பவர்களில் ஒருவர் என்றுநாம் கருதுவதேயாகும். (இதுபற்றிய நமது முழுக்கருத்தையும் தனியொரு கட்டுரையில் விளக்குகிறோம்)

தூத்துக்குடி நகர தி. மு. க. கழக கிளைத் தேர்தல்.

—::—

தூத்துக்குடி நகரத் தி. மு. க. கிளைத் தேர்தல் 27—3—55 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணி அளவில் தூத்துக்குடி வடக்கூர் பார் கிளப்பில் நடைபெறும். சென்னைத் தோழர் கே. எம். கண்ணபிரான் தேர்தல் ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்தி வைப்பார். தூத்துக்குடி நகர எல்லைக்குள் 28-2-55-ம் நாளுக்கு முன் உறுப்பினரான தி. மு. க. கழகத் தோழர்கள் அனைவரும் கூடி தேர்தலைச் சிறப்பாக நடத்துவார்களாக.

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர்.
அறிவகம், சென்னை.

எதிர்பாராதவிதமாக, அதாவது தற்செயலாகத் தேர்க்காலில் அகப்பட்டிறந்த கன்றின் தாய்ப்பசுவுக்கேற்பட்ட துயரத்தைத் துடைப்பதற்காகத் தன்னுடைய புதல்வனைத்தன்னுடைய தேர்க்காலில் போட்டுக் கொன்றவனுக்கு மனுநீதி கண்ட சோழன் என்ற பட்டம் வழங்கி மகிழுமளவுக்கு மந்த மதி படைத்தவர்கள் சேக்கிழாரைத் தவிர வேறு யாரும் இதற்குமுன் இருந்தனரென்றோ, இனிமேல் இருக்க முடியுமென்றோ எந்த மதியிலியும் கூறமாட்டான். ஆனால், சேக்கிழார் பெரிய புராணம் பாடியிராவிட்டால் தமிழர் நாகரிகமே சிதைந்து போயிருக்கும் என்று நமது குன்றக்குடி அடிகளார் கூசாது கூறும் துணிவை எப்படியோ பெற்றிருக்கிறார் என்பதைக் காண நாம் உள்ளபடியே வருந்துகிறோம்.

சமய வாழ்வைச் சமுதாய வாழ்வோடு தொடர்பு படுத்திய பெருமை சேக்கிழாருக்கே உண்டு என்று இவர் கூறிப் பெருமிதங்கொள்கிறார். சமய வாழ்வைக் கடைப்பிடித்திருந்தவர்களைச் சமுதாய வாழ்விலும் ஈடுபடும்படி சேக்கிழார் செய்தாராம். யார் அந்தச் சமுதாய வாழ்வில் ஈடுபட்ட சமய வாழ்வினர்?

வேதம் ஓதும் வேதியர் குலத்தில் பிறந்த ஒருவர் துணிவெளுக்கும் ஏகாலி குலத்தொழிலை மேற்கொண்டு சமுதாய வாழ்வுக்கு வழிகாட்டும்படி சேக்கிழாரால் செய்ய முடிந்ததா? அல்லது மண்பாண்டம் செய்யும் குலாலர் தொழிலை ஒரு செட்டியார் மேற்கொண்டு சமயவாழ்வோடு சமுதாயவாழ்வுக்கும் வழி கோலும்படி சேக்கிழார் செய்தாரா? இல்லையே!

அவரவர் குலத்தொழிலை அவரவர் செய்தனர் என்று தானே சேக்கிழார் கூறியுள்ளார்.

திருநாளைப் போவார் என்ற நந்தனார் (பறையன்) ஒரு அய்யரின் பண்ணையில் வேலை பார்த்தான் என்று கூறுவதோடு சேக்கிழாருக்கு திருப்தி ஏற்படாமல், உயர் சாதிக்காரர் மட்டும் போகக்கூடிய கோயிலுக்குள் நந்தனாரும் போக முயன்று நெருப்பில் விழுந்து மடிந்தார் என்று கூறும் அளவுக்குத் தம்முடைய சாதித் திமிரை (சேக்கிழார் ஒரு வேளாளர்) காட்டித் தமிழ் மக்களின் நாகரிகத்தைக் காப்பாற்றியிருக்கிறார் என்று நாம் நம்ப வேண்டுமென்பது குன்றக்குடியார் போன்றவர்களின் விருப்பம் போலும்!

பெரியபுராணத்தில் பேசப்படும் நாயன்மார்களின் வரலாறுகளை எடுத்துக் கூறப்போனால், அவற்றின் ஆபாசத்தின் அளவை எல்லைக்குட்படுத்திக் கூறமுடியாதே! அந்த அளவுக்கு அறிவுக்கும் அனுபவத்துக்கும்பொருந்தாத சம்பவங்களையன்றோ சேக்கிழாரின் கற்பனை கக்கியிருக்கிறது.

> "தமிழிலேயே மூல நூலாக எழுந்த ஒரு புராணம் இருக்குமானால், அது, பெரியபுராணம் தான்"

என்று இந்தத் தமிழ்ப் பெரியார் கூறுகிறார். உண்மையென்றே வைத்துக் கொள்வோம். இந்த நூலால் தமிழோ அன்றித் தமிழ் மக்களோ அடைந்த நன்மை என்ன? கூறமுடியுமா குன்றக்குடியாரால்?

> பார்ப்பனனுக்குப் பார்ப்பனன் அடிமையாதலை நீ தான் இன்று சொல்லக் கேட்டேன்."

என்று தம்மை ஆட்கொள்ளப் பார்ப்பனவடிவத்தில் வந்ததாகச் சொல்லப்படும் சிவனைச் சுந்தரமூர்த்திநாயனார் என்ற பார்ப்பனர் கேட்டதாகச் சேக்கிழார் கூறியுள்ளார். இந்தச் சம்பவம் எதற்காகக் கூறப்பட்டது? ஒரு பார்ப்பனருக்கு இன்னொரு பார்ப்பனர் அடிமையாய் இருத்தல் கூடாது. பார்ப்பனரல்லாதார்தான் பார்ப்பனருக்கு அடிமையாக இருக்க வேண்டுமென்பதனைத் தவிர, இந்தச் சம்பவத்தால் சேக்கிழார் நமக்குக் கற்பிக்கும் பாடம் என்ன? சேக்கிழாரில் செம்மை காணவந்த குன்றக்குடி அதிபர் இவற்றையெல்லாம் ஏன் சிந்தித்துப் பார்க்க மறந்தார் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

சுந்தரமூர்த்தி நாயனார் இருபெண்களை மணம் செய்து கொண்டதற்கு நமது சந்நிதானம் கூறும் சமாதானம் தான் மிகவும் வேடிக்கையும் விலாப்புடைக்க நகைக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

> "வினையும் வினையின் விளைவாகிய இன்பதுன்பங்களும் நுகர்தலுக்குரியவை. யார் மாட்டும் இவ்விதி மாறுவதில்லை."

என்று திருநெறித் தலைவர் கூறுகிறார். வினையும் அதன் விளைவாக ஏற்படும் இன்பதுன்பங்களும் நுகர்தலுக்குரியவை என்று வினைமுதலாகவுள்ள எல்லாப் பந்தங்களுமற்ற கடவுளின் பிரதிநிதி கூறுவதை வாதத்துக்கு வேண்டுமானால் ஒப்புக்கொள்ளுவோம். ஆனால் சுந்தரமூர்த்தி நாயனார் இருபெண்களை மணம் செய்து கொண்டது அவர் செய்த வினையின் பயனேஎன்று இந்தத் தெய்வசிகாமணியார் கூறுவதைச் சுந்தரரின் வரலாறறிந்தளவருமேஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் அவருக்கு வினைகிடையாது. காரணம், அவர் கடவுளின் பிரதிபலிப்பு.

கயிலைவாழ் சிவன் ஒரு நாள் தம்மை நன்றாக அலங்கரித்துக் கொண்டு தம்முடைய அழகை ஒரு கண்ணாடியில் பார்த்தபோது, அந்த அழகு ஒப்பதும்மிக்கதும் இல்லாத பேரழகாய் தோன்றவே "சுந்தரா இங்கே வா" என்று கண்ணாடியில் தோன்றிய தம்முடைய நிழலை அழைத்தாராம். உடனே ஒரு ஆணழகன் ஆண்டவன் அருகில் வந்து நின்றானாம். இதுதான் சுந்தரமூர்த்தி நாயனாரின் சுருக்கமான வரலாறாகும்.

எனவே, சுந்தரர், மற்ற உயிர்களைப் போலும் இவ்வுலகிலே யோனிவழிப் பிறந்து, நல்வினை தீவினைகளைச் செய்து அவற்றிற்கேற்ப வெவ்வேறு உலகங்களிற் சென்று, அந்தந்த வினைப்பயன்களை அந்தந்த உலகிலே இருந்து நுகர்ந்து, மறுபடியும் இவ்வுலகில் வந்து பிறப்பவர்கள் போலன்றிச், சிவ உலகத்திலேயே — சிவனுடைய விருப்பத்திற்கே—சிவனுடைய வடிவமே ஒரு வடிவமாகக் கயிலாயத்திலுள்ள சிவனுடைய வீட்டில் இருந்த கண்ணாடியில் பிறந்தவராயிற்றே! இப்படிப்பட்டவருக்கு ஆணவம் மாயை கன்மம் என்று சொல்லப்படும் மும்மலங்களும், இருப்புவினை (சஞ்சிதம்) நுகர்வினை (பிராரத்தம்) நிகழ்வினை (ஆகாமியம்) என்று சொல்லப்படும் மூவினைகளும் உண்டென்று கூறமுடியாதே! அப்படி உண்டென்று யாராவது உளறினால், சுந்தரரின் வேறுபடாத சிவனுக்கும் இவை உண்டென்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். அப்படி ஒப்புக்கொண்டால் சிவனை முழுமுதற் பெருங் கடவுள் என்பார் கூற்றுக் கருத்தழிந்தவரின் வெறிச் செயலென்று ஒதுக்கித் தள்ளுவதே முறையாகும். தமிழர் நாகரிகம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்து பணியாற்றுபவர்கள், முதலில், கடவுளைப் பெரியபுராணம் போன்ற பொய்யும் புனைசுருட்டும் நிறைந்த புராணங்களில் கண்டு புளகாங்கிதம் அடையும் புத்தியை மாற்றிக்கொள்ள வேண்டும். பிறகு கடவுள் எங்கே—எப்படி — எதற்காக இருக்கிறார் என்பது எளிதில் புலப்பட்டுவிடும்.

*

தமிழர் நாகரிகத்தைத் தக்க சமயத்

முடிவு கட்டப்பட்டது

"மத சபையிலிருந்து பள்ளிக்கூடங்கள் பிரிக்கப்பட்டது, முக்கியமான ஒரு மாறுதலாகும். பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் சிறுமிகள் மீது மதக் கருத்துக்களைப் பலவந்தமாகத் திணிப்பதென்ற அந்தப் பழைய பழக்கத்திற்கு முடிவுகட்டப்பட்டது.

—சோவியத்நாடு

தில் காப்பாற்றிய இன்னொருவர் யார் என்பதை நமக்கு அறிவிக்க வந்த குன்றக்குடி அடிகள், சேக்கிழாருக்கு அடுத்தபடியாகச் சொல்லக் கூடியவர் கம்பர்தான் என்கிருர். கம்பர் தமிழ் மக்களுக்குச் செய்த பேருதவிக்கு ஈடாக எந்த உதவியும் செய்யமுடியாதென்று இந்த முனிபுங்கவர் கூறுகிருர்.

இராமாயணம் தமிழ் மக்களால் விரும்பிப் படிக்கப்பட்ட காலத்தில் கம்பர் தோன்றிஞராம். தமிழ் மக்களுக்கு இராம காதையிலுள்ள ஈடுபாட்டை அறிந்தாராம். வால்மீகி ராமாயணம் அப்படியே இருந்தால் தமிழ் மக்களின் அடிப்படை ஒழுக்கங்கள் சில கெட்டுவிடுமென்ற கவலை கம்பனுக்கு ஏற்பட்டதாம்.

இராவணன் தன்னுடைய கையால் சீதையைத் தொட்டுத் தூக்கிக் கொண்டு போனன் என்று வால்மீகி கூறியிருப்பதைத் தமிழ் மக்கள் படிக்க நேர்ந்தால், தமிழ் நாட்டிலுள்ளவர்கள் யாராவது ஒரு பெண்ணைத் தூக்கிக்கொண்டு போக வேண்டுமென்று நினைத்தால், அவர்கள் அப் பெண்ணைக் கையால் தொட்டுத் தூக்கிக் கொண்டு போய்விடுவார்களே என்ற துயரம் கம்பரைப் பெரிதும் வாட்டவே, அவர் வால்மீகி இராமாயணத்திலுள்ளதை மாற்றித், தமிழர் நாகரிகத்திற்கேற்பத், தமிழ் மக்கள் யாராவது எந்தப் பெண்ணையாவது தூக்கிக்கொண்டு போகவேண்டுமென்று நினைத்தால், அவள் இருக்கிற இடத்தையும் சேர்த்துப் பூமியோடு தூக்கிக்கொண்டு போவதுதான் முறை என்று கம்பர் கூறியிருப்பதை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் இப்படியொரு போலிச் சீர்திருத்தவாதி தமிழ் நாட்டிலா தோன்ற வேண்டும் என்ற எண்ணம்தான் நமக்கு வருகிறது.

இங்குள்ள மக்கள் எல்லோருமே எங்காவது யாராவது ஒரு பெண் தனித்திருந்தால், அவளைத் தூக்கிக்கொண்டு போய்விடுவதுதான், அம்மக்களுடைய அடிப்படைஒழுக்கங்களில் ஒன்றெனக் கம்பர் நினைத்து, வால்மீகி இராமாயணத்தை மாற்றிப் பாடிவிட்டார் என்று இந்தக் குன்றக்குடியார் கூறுகிருர்.

> "வால்மீகி பாடியஇராமாயணத்தில் உள்ள சில பகுதிகள் அந்த வடிவிலேயே தமிழகத்தில் உலவுமானல், தமிழகத்தின் அடிப்படை ஒழுக்கங்கள் சில கெட்டுவிடும் எனக் கம்பர் நினைத்தார்"

என்பது குன்றக்குடியாரின் கண்டுபிடிப்பு. எனவேதான் இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டுபோன நிகழ்ச்சியைமாற்றிப்பாடினராம். தமிழ் மக்களை ஏதோ எடுப்பார் கைப்பிள்ளைகள் என்றுஎண்ணிக்கொண்டு இந்தச் சுவாமிகள் சிங்கப்பூரில் போய்ச்சண்டமாருதப் பிரசங்கம் பொழிந்திருக்கிருர். புராண இதிகாசாதிகளில் காணப்படும் நல்லனகொண்டு தீயன நீக்குதலே செய்ற்பாலதென்று செப்பும் இவர், வால்மீகி இராமாயணம் அந்த வடிவத்தில் தமிழகத்தில்உலவினுல் தமிழரின் அடிப்படை ஒழுக்கங்கள் கெட்டுவிடுமென்ற அச்சம் கொள்வானேன்? தமிழ் மக்களை ஏன் இவ்வளவு மட்டமாக இந்த மடாதிபதி கருதுகிருர் என்பதுதான் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பொதுவாகவே, பெண்களைத் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடும் ஒரு ஒழுக்கங்கெட்ட செயல் தமிழ் மக்களிடையே எப்பொழுதுமே இருந்ததில்லை. ஆனல், தான் மணக்கப் போகும் பெண்ணைத் தன்னுடைய தோளில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடும் ஆபாசம் ஆரியர்களிடையே இருப்பதை இன்றும் ஒவ்வோர் இடங்களில் காண்கிறோம். இந்த ஆரிய அடிப்படை ஒழுக்கத்தை நினைவில் வைத்துத்தான் ஆரியரான வால்மீகி இராமாயணத்தைப்பாடியிருப்பார். இதனைக் கம்பர் மாற்றியது பெருந்தவறென்பதுதான் நமது கருத்தாகும்.

1. இதனல் தமிழ் மக்களின் இயற்கையான நல்ல ஒழுக்கம் கேவலப் படுத்தப்படுகிறது.

2. நிரந்தரமான ஒரு ஆரிய ஒழுக்கத்தை மாற்றியது.

3. உண்மையாக நடந்த ஒரு சம்பவத்தைப் பொய் என்று கூறி வேறு விதமாகப் பாடியது.

இப்படிப் பல தவறுகளை இராமாயணத்தை மாற்றிப் பாடிய கம்பர் செய்திருக்கிருர் என்பதனலேயே கம்ப ராமாயணம் தமிழ் மக்களுக்கு ஏற்ற நூல் அல்ல என்று நாம் பல காலமாகவே கூறிவருகிறோம்.

ஆனல், குன்றக்குடியார் போன்றவர்களுக்குக், கம்பரும் சேக்கிழாரும் தமிழகத்திற்குப் பெரும் உதவி செய்தவர்களாகக் காட்சியளிக்கின்றனர் போலும்! பாவம், திருந்தாத நிலை—தெளிவு பெருத குறை-இது விரைவில் அகலும் என்ற நம்பிக்கையை நாம் இன்னும் இழக்கவில்லை—இழக்க விரும்பவில்லை.

கம்பராமாயணத்திலும், சேக்கிழாரின் பெரிய புராணத்திலும் கவிநயம் புரண்டோடுகிறது என்கிருர்கள்—பாராட்டுகிறோம்! தமிழ் மணம் கமழ்கிறது என்கிருர்கள், வரவேற்கிறோம். ஆனல், அவற்றில் மக்களின் நல்வாழ்வுக்கும் முன்னேற்றத்திற்கும் தேவைப்படும் கருத்தெதுவும் இல்லையே—அதற்காகக் கவலைப் படுகிறோம். கருத்தற்ற காவியத்தை ஏன் இந்த இருபெரும் புலவர்களும் யாத்தனர் என்று எண்ணி வருந்துகிறோம். சர்க்கரை பூசிய நஞ்சையன்றோ இவர்கள் தமிழ் மக்களுக்கு அமிர்தம் என்று கூறி அளிக்கிருர்களே என்ற அச்சமும் ஆத்திரமும் கலந்த அனுதாபமே நமக்கு ஏற்படுகிறது. இதனை நம்மைத் தவருகப் புரிந்து கொண்டிருப்பவர்கள் உணர வேண்டுகிறோம்.

★

குன்றக்குடி கோவிலில்

குன்றக்குடி கோவில் சிப்பந்தி சொக்கலிங்கம் என்பவன் சமீபத்தில் கொலை செய்யப்பட்டதாக குன்றக்குடி போலீசாரால் தொடரப்பட்ட வழக்கில் குன்றக்குடி ஆதீன மடத்தைச்சேர்ந்த சமையல்கார பெரிய அண்ணுமலை என்கிற முத்துகிருஷ்ணனையும் தோட்டக்கார அடைக்கனையும் போலீசார் கைது செய்து காரைக்குடி சப்மாஜிஸ்டிரேட் முன்ஆஜர் செய்ததில் ஷை எதிரிகளைக் காவலில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

மரணமடைந்த சொக்கலிங்கத்திற்கும் எதிரி பெரிய அண்ணுமலைக்கும் ஏதோ ஸ்திரீ சம்பந்தமாக மனஸ்தாபமிருந்ததாகவும் மார்ச்13-ந் தேதிஇரவு எதிரிகள்இருவரும் சொக்கலிங்கத்தை சாக்குப்போக்குக்கூறி சிங்காரத்தோப்பிற்கு அழைத்துச்சென்றுஅரிவாளால் வெட்டிக்கொலைசெய்து கிணற்றில் போட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. போலீசார் கிணற்றைச் சோதனை செய்து அரிவாளைக் கைப்பற்றியதாகத் தெரிகிறது.

புரியவில்லை !

நமது பத்திரிகைகள் பல அரசியல் பிரச்னைகளைப் பற்றி அபிப்பிராயங்களை அள்ளி வீசுகின்றன. ஆனல், சமூகப் பிரச்னைகளைப் பற்றியும், பொருளாதாரப் பிரச்னைகளைப் பற்றியும் அவை கோழைத்தனமாக வாயை மூடிக்கொள்கின்றன. நமது நாட்டின் பிரச்னைகளை ஒன்ருெடொன்று பிணைத்துப்பார்த்துப் பரிசிலனை செய்ய நமது பத்திரிகைகள் தயங்குவது ஏன் என்பது எனக்குப் புரியவில்லை.

பண்டிதர் நேரு,
புதுடில்லி, 21—3—55.

எத்தனையோவாம்!

செல்லுமிடந்தோறும், தீனபந்துவாகக் காட்சியளிக்கிறார், காமராஜர்.

சமரசதூதர் என்று, எதிர்க்கட்சியினர் கூட, சாமரம் வீசும அளவுக்கு வாய்ப்பு பெற்றிருக்கிறார் அவர்.

கரூரில் நடைபெற்ற விழாவொன்றில், அவருக்கு மாலைபோடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனராம், திராவிட கழகத் தோழர்கள்.

யாருக்கும் கிடைக்காத பாக்கியம்! அரசாளும், அவர் அடைகிறார்! அதற்குக் காரணம், எதிர்க்கட்சிகளின் எண்ணங்களையும் மதித்து, அவர் நடப்பதாகக் கூறப்படுகிறது. அவரும் கூடத் தெரிவிக்கிறார், "நாட்டில் எவ்வித கிளர்ச்சிகளும் இல்லாமல் சௌஜன்யமாக எல்லோரும் வாழ வேண்டுமென்பதே என்னுடைய ஆசை" என்பதாக.

நல்ல ஆசை! நாணயமுள்ளோர் போற்றக்கூடிய ஆசை!

எல்லோரும் ஒத்துவாழ!— தெரிவிக்கிறாரே ஒழிய, அதனால் எல்லோருடைய ஆசைகளையும் அவர் ஏற்றுக்கொள்ளுகிறார், என்றல்ல, பொருள்.

ஒற்றுமையை விரும்புகிறார்!— அதே நேரத்தில், தன்னுடைய கட்சியின் கொள்கைகள் எதனையும் விட்டுக்கொடுக்க விரும்பவில்லை.

திறமைசாலி! — என்கின்றனர், விஷயமறிந்தோர்.

தீனபந்து!—என்கின்றனர், பலர். காங்கிரசிலிருப்போரோ, ராஜ தந்திரம், என்று வர்ணிக்கின்றனர்.

அது எப்படியோ போகட்டும்! ஆனால், அவரது ஆட்சியைப் பற்றி, நாட்டு மக்களிடையில் எரிச்சல் அதிகம் இல்லை—காரணம், குளிர்ச்சியால், அணைக்கிறார் எதனையும்.

அவரைப் பேட்டிகாணச் செல்லுவோரிடம், ஆலையரசர்களானாலும் 'ஆகட்டும், பார்க்கிறேன்'— தொழிலாளர்களானாலும், 'ஆகட்டும். பார்க்கிறேன்' — யாராயிருந்தாலும் 'ஆகட்டும், பார்க்கிறேன்.'

அந்த அன்புச் சொல்லே, இன்றைய அரசியலில் அவருக்கு, இணையிலாத ஒரு இடத்தைத் தேடித் தந்துள்ளது—பெரியாரே பாராட்டும் பேற்றினை வழங்கியிருக்கிறது.

அவருக்கருகிலிருக்கும், இதோ ஒருசகா, தோழர் பக்தவத்சலம்— காமராஜருக்கு வலதுகரம் போன்றவர் எனக்கு கூறப்படுவர்— அவர், கூறினாராம், சட்டசபையில். எத்தனையோ, இருக்கிறதாம்!!

நாட்டில் நடைபெறுகின்ற கிளர்ச்சிகள் எத்தனையோ. இருக்கிறதாம்.

கிளர்ச்சிகளில்லாமல் நாடு வாழ வேண்டுமென்றார், காமராஜ்.

பக்தவத்சலம், நாட்டில் 'எத்தனையோ!' இருக்கிறது, என்றார்.

தோழர் கோவிந்தசாமி M. L A. கேட்டாராம், "ஐயா, அமைச்சரே! தோழர் மு. கருணாநிதி தலைமையில், டால்மியாபுரத்தின் பெயரை மாற்ற போராட்டம்நடைபெற்றதல்லவா?" என்று.

அதற்குத்தான், அன்பர் பதிலளித்தாராம்—எத்தனையோ போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன, என்று!

எத்தனையோ போராட்டங்கள் நடைபெறுகிறதாம்! தெரிவித்திருக்கிறார், அவர்.

அதில், தொனிக்கும் அலட்சிய சுபாவத்தையே, அன்பர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எத்தனையோவாம், எத்தனையோ!!

இந்த 'நல்லவர்கள்' ஆட்சியில், 'எத்தனையோ' நடப்பது, கித்தாப்புக்குரிய காரியம் போலும். இருவர் பிணமாயினர்! உறுப்பிழந்தோர் ஏராளம்!! காயமடைந்தோர், கட்டம் பெரிது. சிறைக்குச் சென்றதால், செத்தான் திண்டுக்கல் தோழன் குமரவேல். துப்பாக்கி, சுட்டது! வழக்குகள்—தொல்லைகள் இத்தனையும், அந்தமான் தீவில் அல்ல நிகழ்ந்தது. அன்பர் பக்தவத்சலத்தைத் தாங்கியிருக்கிறதே இந்தப் 'புண்ய பூமியில்' தான். ஆனால், தெரியாதவர்போலச் செப்புகிறார், எத்தனையோ நடைபெறுகிறதாம்!

இப்படி 'எத்தனையோ' நடைபெறுமலிருப்பதே தன்னுடைய ஆட்சிக்கு அழகு எனக் கருதுகிறார், காமராஜ். அதற்காக, அவர் வகுத்துக்கொண்டிருக்கும் வழியே அலாதியாயிருந்துவருகிறது. அவருடைய சகாவோ தெரிவிக்கிறார் திமிருடன்—எத்தனையோ நடக்கிறதாம்.

இப்படி 'எத்தனையோ' நடப்பது, பூணாரம் பூணுகின்ற செயல்போலும் பக்தவத்சலத்துக்கு. உயிர்கள் பல இரையாவதும், உறுப்பிழந்தோரை உலவச் செய்வதும், சகஜமான சம்பவங்கள் போலும்! ஹிட்ரல்ல; பக்தவத்சலம். சாகசத்தால், ஆசனம் ஏறியவர்! கடந்த பொதுத்தேர்தலில், மண் கவ்விய, 'மகா புருஷர்!' மகாத்மாவை 'லேபிளாக்கி' மந்திரி வியாபாரம் நடத்துவது, அவருடைய குடும்பக்கலை. அப்பேற்பட்ட மகானுபாவர், அலட்சியத்தோடு சொல்லுகிறார், எத்தனையோவாம், எத்தனையோ.

'கல்லக்குடி' அறப்போர், உரிமைவிரும்பிகளின் எழுச்சிப் போர்.

அதனை, எள்ளி நகையாடுகிறார், பக்தவத்சலம். இப்படி எள்ளி நகையாடியவர் தான், அன்பர் ஆச்சாரியார். 'கணக்கைத் தீர்க்கிறேன்' என்றுகூட கர்ச்சித்தார். முடிவை நாடு அறியும். மிகச் சாதாரணம் பக்தவத்சலம் — விட்டகுறை

வந்த கடிதம்

ஐயா,

18—3—55ல் அரிஜனங்களுக்கு ஆயிரம் கிணறுகள் வெட்டப்படும் என்று சுகாதார மந்திரி ஷெட்டி அவர்கள் பேசி இருக்கிறார்.

தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று பேசுகிற மந்திரிகள் அரிஜனங்களுக்கென்று ஏன் தனிக் கிணறு வெட்ட வேண்டும்? அரிஜனங்களுக்கென்றும் மற்றவர்களுக்கென்றும் தனித்தனி கிணறுகள் வெட்டிக்கொடுத்தால் தீண்டாமை எப்படி ஒழியும். எல்லோரும் வித்தியாசம் பாராட்டக் கூடாது. ஒரே கிணற்றை எல்லோரும் உபயோகிக்கவேண்டும் என்று சட்டம் இயற்றலாம் அல்லவா?

ஆவடியில் பேசிய தீண்டாமை ஒழிப்புத் திட்டம் இதுதானா?

R. S. மணி.
சிறுவளூர்.

தொட்டகுறை போலும், அரசுத் திமிர், இவருக்கும் வந்திருக்கிறது.

நாடு முழுதும் கோரிய பிரச்னை, அந்தப் பெயர் மாற்றம் — ஏற்க வில்லை, அரசு.

அதனால், எரிமலை அடங்கிவிட்டது என்றல்ல பொருள்.

ஆட்சியிலமர்ந்ததும், அன்பர் காமராஜ், எல்லோருக்கும் சொல்வதுபோல, 'ஆகட்டும் பார்க்கிறேன்' என்று சொல்லாமல், 'நிச்சயம் பெயரை மாற்றச் செய்கிறேன்' என்று வெளியிட்டாராம், வேண்டியவர்களிடம் — 'அந்த வேண்டியவர்கள்' சொன்னதை, நாமும் நம்பினோம், மக்களும் எதிர்பார்த்தார்கள்.

குட்டு, இப்போது வெளிப்பட்டிருக்கிறது—குமுறலையும் கிளர்ச்சிகளையும், மதிப்பதாகக் கூறுவதெல்லாம், காலச்சக்கரம் ஓடவே ஒழிய கடமை உணர்ச்சியுடன் அல்ல என்கிற உண்மை.

அதனை உறுதிப்படுத்துவது போல, பக்தவத்சலம், அலட்சியத்தை வெளிப்படுத்துகிறார்.

ஆச்சரியப்படவில்லை, நாம் — அவர் கூறியது கேட்டு.

ஆனால், காமராஜரின் வேஷத்தைக் கலைக்கிறார்களே, இவர்கள்! மக்கள் மன்றத்துக்கு இப்போதைய ஆட்சியின் உருவைக் காட்டுகிறார்களே! என்பதையே, உணருகிறோம்.

காமராஜ் தட்டுவது சாகச முரசம்!—என்பதையே, பக்தவத்சலத்தின் அலட்சியம், வெளிப்படுத்துகிறது. நன்றி.

நாட்டு மக்கள் மத்தியில், எவ்வளவுதான் 'நல்லவர்'களாக உலவிடினும், உள்ளத்தில் தூய்மை வேண்டும் — பிற கட்சிகளின் விஷயத்தில். அது இல்லை என்பதே 'அலட்சியம்' சொல்லும் செய்தி.

இதனை, அறியவேண்டும் தோழர்கள். அப்போதுதான், காங்கிரசின் இன்றைய சொரூபம் விளங்கும்! ☆

எதிரொலி எங்கும்

"அபிவிருத்திகளைச் செய்யப்போகிறோமென்று முழ நீளத்தில் விபரம் தந்திருக்கிறீர்கள். அதைத் துருவிப் பார்த்தேன்; ஏமாந்தேன். எங்கள் சென்னை ராஜ்யத்துக்கு என்று, சிறு திட்டம் கூடத் தென்படவில்லை, அதில். நவீனயுகத்தில், மின்சாரசக்தி மிகவும், முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால், எங்கள் தென்னாட்டிலோ, தேவையான மின்சார சக்தி இல்லை! இதனால், அடிக்கடி, வீட்டு உபயோகத்துக்குத் தேவையான மின்சார சக்தியைக்கூட, சர்க்கார் கட்டுப்படுத்த நேருகிறது."

* * *

மார்ச் 20ந் தேதி, நாடெங்கும் ஐந்தாண்டு திட்டக் கண்டன நாள், நடத்தியிருக்கிறோம் நாம். வாழும் வடக்கு! தேயும் தெற்கு!!—பற்றி, நாட்டின் நாலு மூலைகளிலும், நமது தோழர்கள் முழக்கம் எழுப்பியிருக்கிறார்கள்.

அவர்கள் தந்த விபரம் அல்ல, இது. அன்பர் நடேசன், மார்ச் 21ந் தேதி டில்லி பார்லிமெண்டிலே, இவ்வண்ணம் பேசியிருக்கிறார். காரசாரமாகப் பேசினாராம்! தெற்கை ஏன் இப்படி அலட்சியம் செய்கிறீர்கள்?—என்று, கேட்டாராம். வடநாட்டிலிருக்கும் உங்களின் வஞ்சகம் பற்றி தென்னாடு, குமுறுகிறது! தெரியுமா?—என்று, முழக்கமிட்டாராம்.

Powerful Speech – என்கிறது, 'மெயில்,' ஏடு.

அவ்விதம் அவர் ஆத்திரத்தோடு பேசியிருப்பதை, 'துவேஷம் —வெறி—அர்த்தமற்ற கூச்சல்' என்று வர்ணிக்கும் 'அகில உலக' அன்பர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

அன்பர் நடேசன் கேட்டாராம், "நீலகிரியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக குண்டாதிட்டம் பெயரில் ஒரு திட்டத்தை சென்னை சர்க்கார் சமர்ப்பித்தார்கள். இந்ததிட்டத்தை **1951**லேயே அனுப்பிவைத்தோம். நான்கு ஆண்டுகள், போய்விட்டன! சிறு பதில்கூடக் கிடைக்கவில்லை, மத்திய சர்க்காரிடமிருந்து!!"

சிறு பதில்கூடக் கிடைக்கவில்லையாம்! ஆண்டுகளோ நாலாகிவிட்டன!! இதைச் செய்துதர முன்வரவில்லை, டில்லி — ஆனால் அதற்குப்பதிலாக, பாராபோல் எனுமிடத்தில் அணைகட்டி மின்சாரம் உற்பத்தி செய்ய ஏற்பாடுகளைச் செய்யுமாறு, யோசனைகள் அனுப்பியிருக்கிறதாம். இத்திட்டத்தை அமுலாக்க, குடகு சர்க்காரின் அனுமதி வேண்டும். அதைப் பெற்று, எந்த இடத்தில், எப்படி மின்சார உற்பத்தியைச் செய்யலாம் என்று திட்டம் தீட்ட பல்லாண்டுகள் செல்லுமாம்! இப்படி ஏன், வஞ்சனை காட்டவேண்டுமெனக் கேட்கிறார், நடேசன்.

சொன்ன யோசனையை ஏற்கவில்லை.

புதுயோசனை வருகிறது.

எத்தனை ஆண்டுகள் செல்லுமோ?

காலதாமதம்செய்து, முயற்சிகளைக் குறைக்கும் வேலைகள் ஏன்?—

என்று கேட்கிறார், அவர். அவ்வண்ணம் கேட்டுவிட்டே, எச்சரித்திருக்கிறார், நடு நடுவில் வடநாட்டு மெம்பர்கள் குறுக்கிட்டும் கூட — அவர், கூறினாராம், சபையில் — "தென்னிந்தியாவில் வாழும் மக்களுக்கு என்ன தேவையோ அவைகள் கிடைப்பதில்லை. வட இந்தியாவிலிருந்து வெகு தூரத்திலிருக்கிறோம், நாங்கள்! சாதாரணமாக இந்தப் பார்லிமெண்டில் பேசுவதென்றால்கூட, தென்னாட்டு மெம்பர்களாகிய எங்களுக்குச் சந்தர்ப்பம் சரிவரக் கிடைப்பதில்லை!" என்பதாக. இவைகளைத்தானே, மார்ச் 20-ந் தேதியன்று, நாமும் எடுத்துரைத்தோம்! நாம் சொன்னால், சீறுகிறார்களே—அவர்களுடைய சிந்தனைக்கு, வைக்கிறோம்.

டில்லி சபையில் மட்டுமல்ல, சென்னை சட்டசபையில்கூட உறுப்பினர்கள் பலர். வடநாடு செய்யும் ஓரவஞ்சனைபற்றி எடுத்துரைத்திருக்கிறார்கள். நமது தோழர்களல்ல, செட்டிநாட்டுச் சீமான் முத்தையா செட்டியாரே செப்பினாராம்—புதிதாக ஒரு மந்திரியைக் கூட நியமிக்கலாம்! என்பதாக. வடக்கே போய், பணம் வாங்கிக் கொண்டு வருவதே, அந்த மந்திரியின் பணியாக இருக்கலாம்! என்றாராம்.

நடேசன், முத்தையா—நம்மவர்களல்ல. கனவான்கள்! காங்கிரசுக்கும், தலைவர்களுக்கும் சாமரம் வீசும் சீமான்கள்! அவர்கள், செப்புகிறார்கள், இதுபோல. செப்புகிற நோக்கம் எதுவாயினும், சொல்லுகிற உண்மையையே சிந்திக்க வேண்டுகிறோம்.

வடக்கு வஞ்சிக்கிறது நம்மை!— உண்மை, இது. மறைப்பதில், பிரயோசனமில்லை. ☆

சேவலும்—கழுகும்!

உழைப்பாளர் கட்சியின் குரலென விளங்கும் "உழைப்பாளி" எனும் ஏடு, 15—3—55 இதழில் "பழிதீர்க்கும் படலமா?" எனும் தலைப்பிட்டு தீட்டியிருக்கும் தலையங்கம்:—

தஞ்சை, திருச்சி, சேலம், தென்னாற்காடு ஆகிய நான்கு மாவட்டங்களில் வாழும் எல்லா வன்னிய மாணவர்களுக்கும் இலவச கல்வி அளித்திருப்பதனால், பள்ளிகளில் அவர்களிடமிருந்து வாங்கிய சம்பளத்தை அவர்களிடமே திருப்பி கொடுத்துவிடும்படி இந்த நான்கு மாவட்ட பள்ளிக்கூடங்களுக்கும் உத்தரவு அனுப்பியது சென்னை சர்க்கார். அதன்படியே நம்மின மாணவர்களிடம் வாங்கிய சம்பளத்தை பள்ளிகூட நிர்வாகிகள் திருப்பிக் கொடுத்து அவர்களே சம்பளமின்றி இலவசமாக படிக்கவும் அனுமதித்தனர்.

இதைக்கண்ட வன்னியர்கள் காமராசரையும் அவரது சர்க்காரையும் பாராட்டினர். பாராட்டியது மட்டுமின்றி காங்கிரஸ் கட்சி இதுவரை வன்னிய மக்களுக்கும் வன்னிய சமூகத் தலைவர்களுக்கும் செய்த தவறுகளையும் மறந்து காங்கிரசை கட்டி காப்பதிலும் அதன் எதிர்ப்பு சக்திகளைத் தகர்ப்பதிலும் முனைந்தனர்!

ஆனால் அதே நேரத்தில் காமராசர் சர்க்கார் செய்த விஷமத்தையும் அவர்களால் மறைக்க முடியவில்லை. சில விஷமிகளின் மூலம் வன்னிய மக்களுக்குமட்டுமா கல்வி சலுகை? என்ற கோஷத்தை உண்டாக்க நினைத்த அவர்களின் எண்ணம் வெற்றிபெறவில்லை.

இதில் தோல்வி கண்ட காமராசரும் அவரது சர்க்காரும் வன்னிய மக்களை பழிவாங்க மறைமுகமாக பல காரணங்களைத் தேடிக்கொண்டிருந்தது. இந்த நயவஞ்சகத்தையும் கழுத்தறுப்பு செயலையும் அறியாத வன்னிய தலைவர்கள் "காமராசர் சர்க்கார் வன்னியர்களுக்கு வேண்டிய சலுகைகளை செய்துதர துடிப்பதாகவும் இனி நமக்கு இனத்தின் பெயரில் சங்கமும் நமக்கென ஒரு தனி அமைப்பும் தேவை இல்லை" என்று வன்னியர்களின் மத்தியிலேயே பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தனர்.

தலைவர்களின் போக்கையும் அவர்களது பேச்சையும் அறிந்த காமராசரும் வன்னியர்களின் வளர்ச்சியை விரும்பாத அவரின் சகாக்களும் வன்னியர்களை பழி வாங்கும் பணியில் இறங்கி விட்டனர்.

"கல்விச் சலுகை வன்னியர்கள் அனைவருக்கும் அல்ல, குற்றப்பரம்பரையை சேர்ந்தவர்களுக்கு மட்டுமே!" என்று திருப்புமொழி கூறி கல்விச் சலுகையை ரத்துசெய்து மாணவர்கள் பள்ளியில் கட்டி திரும்ப பெற்றுக் கொண்ட சம்பளத் தொகையை மீண்டும் பள்ளியில் கட்டவேண்டும் என்றும் பள்ளிக்கூட நிர்வாகிகள் அந்த பணத்தை திரும்பவும் மாணவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்றும் உத்தரவு விடுத்திருப்பதாக தெரிகிறது.

இது உண்மையானால் காமராசர் ஆட்சிக்கு மிகவிரைவில் இறுதிக் காலம் நெருங்கி விட்டது என்றே எண்ணுகிறோம்!

வன்னியர் சமூகத்தை அடக்கவும் காமராசரும் காங்கிரஸ் கட்சியும் செய்த முயற்சிகள் கையாண்ட முறைகள் கணக்கில் அடங்காதது. இவர்கள் வன்னியர் சமூகத்தை அடக்கி அவர்களின் அமைப்புகளை அழிக்க செய்த முயற்சிகளும், காட்டிய ஆர்வங்களும் இவர்களின் எண்ணத்திற்கு மாறாகவே வன்னியர்கள் கட்டுப்பாடாகவும், ஒற்றுமையுடனும் பலப்பட்டு ஒன்றுபட்ட சக்தியாக வன்னியர்கள் விழிப்படைந்து விட்டார்கள் என்ற உண்மையை கடந்த விருத்தாசலம் உபதேர்தல் உணர்த்தியதோடு, காமராசர் போன்ற வன்னியர் சமூக எதிரிகளை அழித்துவிடும் என்ற அச்சத்தையும் தந்தது. பிறகு தான் காமராசர் வன்னியர்களை பழி வாங்கும் முறையை மாற்றி அமைத்துக்கொண்டார். அதுவே வன்னியர்களுக்கு அவர் தந்த பிரதிநிதித்துவமும், கல்விச் சலுகையும் என்பதை வன்னியர்கள் புரிந்துகொண்டுவிட்டார்கள்.

காமராசர் கட்சி வேண்டுமானால் வன்னியர்களை பழிவாங்கி விட்டோம் என்று எண்ணி திருப்தி அடையலாம். ஆனால், வன்னியர் இனம் எவ்வளவு உயர்ந்த நிலையில் சிறப்பாக வாழ்ந்ததோ, அந்த அளவுக்கு பலராலும் பலமுறை வஞ்சிக்கப்பட்டு ஒரு மனித இனம் எவ்வளவு கீழான நிலைக்கு வரமுடியுமோ அந்த அளவிற்கு வந்து விட்டது. இனி புதிதாக வன்னியர்களுக்கு புதிய கெடுதி எதுவும் செய்ய முடியாது.

★

பிறப்பு

20-3-55 ஞாயிறு காலை 7மணிக்கு மாயூரம் தோழர் காந்தியின் துணைவியார் சந்திரோதயத்திற்கு ஆண்மகவு பிறந்து தாயும், சேயும், சுகம் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறார்.

காஞ்சி

மறுமலர்ச்சிக் கழக

ஆண்டு விழா

—[::]—

26, 27-3-55 சனி ஞாயிறு

இரண்டு நாட்கள் நடைபெறும்.

முதல் நாள்

தலைவர்: சடையாண்டி.

டி. கே. சீனுவாசன்

வே. சம்பந்தம்

இ. எத்துராசு

இரவு 9 மணிக்கு

சி. கே. எஸ். வாசன், கா. வே. முருகேசன்

இன்னிசை.

இரண்டாவது நாள்

தலைவர்: சி. வி. எம். அண்ணாமலை

அண்ணா

எம். பி. சுப்ரமணியம்

கே. டி. எஸ். மணி

இரவு 9 மணிக்கு

அய்யம்பேட்டை தி. மு. க. வினர் நடிக்கும்

'பரப்பிரம்மம்', 'வழக்கு வாபஸ்'

நாடகங்கள்.

அனைவரும் வருக.

திராவிடநாடு

காஞ்சி] 27—3—55 [ஞாயிறு

பணிகள் பல

★

கழகத் தோழர்கள், வரும் 27-ந் தேதி, புது ஆண்டுக்கான நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள்.

சட்டதிட்டத்தின்படி கழகம் நடைபோட ஆரம்பித்து நடைபெறும் இரண்டாவது தேர்தலாகும், இது. என்றாலும், இப்போது நடைபெறும் கழகத் தேர்தல்கள், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுத்து, கழகம் என்பது கனவான்கள் வீட்டுச் சொத்து அல்ல; காளைகளின் கோட்டை என்கிற உன்னதமான நிலையைக் கடந்த சில ஆண்டுக்குள் தி. மு. கழகம் செய்து காட்டியிருக்கிறது.

இந்தச் சீரிய செயல்தான், கழகம் பெற்றுக் காட்டியிருக்கும் வெற்றிகளிலெல்லாம் குறிப்பிடக் கூடியதாகும். ஏனெனில், அரசியல் இயக்கங்கள் என்ற பேரால், அறியாமையிலும் மூட நம்பிக்கையிலும் மூழ்கிக்கிடக்கும் மக்கள் மத்தியில், அவர்தம் மடமையைப் பயன்படுத்தி, பவனிவரும் கட்சிகள் உண்டு. தி. மு. க. வின் பணி, அதுவல்ல! புதிய பாதை—பொறுப்புகள் நிரம்பிய பாதை—பொன்னாடு, அடையும் பாதை. அறியாமையை விரட்டவும், அரசியல் உரிமை பெறவும், புது வாழ்வு மலரவும் பொறுப்பேற்படுத்திக்கொண்டு பணிபுரிந்து வருகிறது.

இதனாலேயே, வாலிபர் குழாம், 'வானம்பாடி'யெனக் கருதுகிறது, கழகத்தை! புது அரும்புகள் பல, பூத்த வண்ணமேயுள்ளன!! இந்தப் பூரிப்புக் காட்சி, புகைசூழும் உள்ளமும், சுயநல சுபாவமும் கொண்டோரின் சிந்தையில், தேள் கொட்டுவதில் வியப்பில்லை. அதனால்தான், தேசீயத் தோழர்களில் சிலர்கூட, எரிச்சல் கண்களோடும், அதே நேரத்தில், 'என்ன செய்வது? ஒருகுறையும் கூற முடியவில்லையே! இவர்கள் மீது!' என்கிற சிந்தனையாலும், ஏதாவது சொல்லித் திருப்திப்பட ஆரம்பிக்கின்றனர். சிறுசெய்தி கிடைத்தால்கூட, பெரிய எழுத்தில் விளம்பரம் செய்யப்படுகிறது! அவ்வளவு தாகம், அங்கே!! வருமீன் வருமென்று வாடியிருக்கும் கொக்குகள்போல், ஏதாவது இழுக்குச் சொல்லும் சுபாவம், ஏனோ தெரியவில்லை, நமது கழகத்தின்மீது அதிகம் இருந்துவருகிறது, அவைகளுக்கு! இந்த சில ஆண்டுக் காலத்தில், நமது கழகக்காளையர், நாட்டுக்கும் தமிழுக்கும் செய்து வந்திருக்கும் நற்பணிகளை, ஏனைய கட்சியிலிருப்போர் செய்திருந்தால் 'இந்திரா! சந்திரா!' என்று போற்றிப் புகழ்பாடியிருப்பர். ஆனால், அந்தப்பணிகளைச் செய்வோர், நாம்—என்பதால், ஏளனமும் பழியையுமே, பரிசாகப் பெற்றுவருகிறோம். இப்படி பழிதூற்றும் படலம், மாற்றார்களிடமட்டுமல்ல, உற்றார்களிடமும்கூட இருக்கிறது! ஒருவித வசதியும் இல்லாது, உணர்ச்சியை மூலதனமாக வைத்து, நற்பணிகளில் நாம் ஈடுபடுகிறோம் என்பதே, அவர்களின் உறுத்தலுக்குக் காரணமாயிருக்கவேண்டும்.

இல்லையென்றால், சினமும் சீற்றமும் எப்போதும் ஏனிருக்கவேண்டும்? கழகப்பணிகளைச் செய்கிறோம்,—அதேநேரத்தில் நாட்டின் துயர் துடைக்கும் நற்காரியங்களிலும் ஈடுபடுகிறோம்—உதாரணத்துக்கு கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு கைத்தறியாளர் துயர் துடைக்க நாம் தோளில் துணிசுமந்து விற்றதைச் சொல்லாம். அப்படிச் செய்தபோதும், தூற்றல் பாணம் தொடுப்போர், கேலி செய்யத் தவறவில்லை! 'தூக்கிச் சுமந்தால், போதுமோ?' என்றனர் — இன்று, நாம் காட்டிய பாதையில், கைத்தறி போர்டாரே முன்வந்துள்ளனர். கார்மூலம் ஆங்காங்கும் கைத்தறித் துணிகளைக் கொண்டு போய் விற்பதாக முடிவு செய்திருக்கின்றனர்! நம்மிடம் 'கார்' இல்லாததால், தோளில் சுமந்தோம்—தூற்றினர். ஆனால், இன்று, அதே முறையைப் பிறர் பின்பற்றும்போது, அவைகளைப் போற்றுகின்றனர்.

மருமகள் தொட்டால் மண்பாண்டம்! மாமியார் தொட்டால் பொன்பாண்டம்!!—எனும் பழமொழி, வீட்டில் மட்டுமல்ல, நாட்டு அரசியலிலும் நடைபோடக் காண்கிறோம். காரணம், பல அரசியல் தலைவர்களுக்கு, நாட்டைவிட, வளரும் வாலிபர்களே, பெரிய பிரச்னைகளாகி விடுகின்றனர். இல்லையென்றால், வளரும் இளைஞர் கோட்டையான தி. மு. க.வை வாழ்த்தவேண்டியவர்கள்கூட, 'துரோகம்' 'சுயநலம்' அரசியல் வேட்டை, என்று அனுதினமும் அலறிக்கொண்டிருப்பர்? அப்படிப்பட்டவர்கள், நாம் எது செய்தாலும், அதனை இழித்தும் பழித்தும் பேசுவதையே முதல் பணியாகக் கொண்டிருக்கின்றனர். இந்த 'சாபத்தீடு'க்கு **ஆளான** ஒரு கட்சியை, இந்த அகில உலகத்திலும், காணமுடியாது—நம்மைத் தவிர! எதுசெய்தாலும், குற்றம் கூறுவதே, இந்தக் குணாளர்களின் குணம்.

அப்படிப்பட்ட அரசியல் இயக்கங்களின் மத்தியிலே, அறிவும் ஆற்றலும் நிரம்பிய ஒரு வாலிபர் குழாத்தைத் தயாரித்து வருகிறது, தி. மு. க. ஜனநாயக மணம் வீசுகிறது, இங்கே! ஒருவர் இட்ட கட்டளைக்கு ஓடியாடும் சுபாவம் கிடையாது! கட்டுப்பாடு என்பதை, 'தலைவணங்குவது' என்கிற அளவுக்குக் கொண்டுபோவது கிடையாது. அதட்டலுக்கும், உருட்டலுக்காகவுமல்ல, கழகம் நடைபோடுவது. அன்புப் பிணைப்பு! பாசவலை! சகோதர சுபாவம்!—இவைகளே, கழகத்தின் சொத்துக்கள். இந்தப் பாசமும் அன்பும், நேற்றையதினம் புதிதாக முளைத்தவைகள் அல்ல — சுயமரியாதை இயக்கத்தின் சுடர்மணிகளாம் அழகிரி போன்றோர், நமக்கு அளித்துச் சென்ற செல்வங்கள். ஆரம்பகால சுயமரியாதை இயக்கம், ஒரு தனிக்குடும்பம்! அதே குடும்பப் பாசத்தால்தான், கோலோச்சும் கட்சியே மிரளுகிற அளவுக்கு, கொள்கை முழக்கம் செய்துவருகிறோம் நாம். இந்தக் கூட்டுப் பொறுப்பு இருப்பதாலேயே, மாற்றாரின் மன எரிச்சலும், உற்றாரின் பொறாமை அம்புகளும், நமக்கு சிறிது கூட சிந்தாகூலம் தருவதில்லை.

இந்தப் பொறுப்பு, அதிகமாக வளர வேண்டிய, ஆண்டுகள் நம்மை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றன. அதனாலேயே, இப்போது நடைபெறும் கழகத் தேர்தல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததெனக் குறிப்பிட்டோம். ஏனெனில், வருகிற ஆண்டுகளில், கழகத்தின் பொறுப்புகள் அதிகமாகப்போகின்றன.

27ந் தேதி தேர்தல்கள் முடிந்து, பொதுக்குழுத் தேர்தலும் முடிவடைந்து, புதிய பொதுச் செயலாளரும் தேர்ந்தெடுக்கப் படவேண்டிய காரியங்கள்—நம்மை முன்னோக்கியிருக்கின்றன. அவை முடிந்ததும், வருகிற ஜூன் திங்களில், திருச்சியில் மாநில மாநாட்டை நடத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மாநில மாநாடு என்றால், இம்முறை, புதிய பொலிவும் புதிய திட்டங்களும் தீட்டித்தரப்போகிறது—நாட்டுக்கு! அவ்வகையில் அமையப்போகும், அம் மாநில மாநாட்டுக்கு, செலவுப் பணத்துக்கு நம்மையே நம்பியிருப்போர் நாம். ஏழை எளியவர்கள் வழங்கும் அணா பைசாக்களைக்கொண்டு, எல்லாவற்றையும் செய்யவேண்டிய நிலையிலிருப்போர் நாம். ஆகவே, அந்தப் பொறுப்புகளையெல்லாம் புதிதாக வரும் நிர்வாகிகள் நிச்சயம் உணர்வார்கள்! ஏனென்றால், நமது கழகத்

தோழர்கள் யாவரும், இருளைப் போக்கிடும் விடிவெள்ளிகள்!! அவர்களது, உழைப்பும் உணர்ச்சியும், பன்மடங்காகவேண்டும் என்று சொல்லி, 27ந் தேதி தேர்ந்தெடுக்கப்படும் கழக நிர்வாகிகளையெல்லாம் முன் கூட்டியே வாழ்த்துகிறோம்.

✶

தொடர் சித்திரம்

கடிகாரம்

18

[அண்ணல்]

சிக்கல்கள் தீர்ந்துவிட்டன! இந்தச் செய்தியை நல்லானிடம் சொன்னேன், வீட்டுக்கு வந்து. குழி விழுந்து கிடந்த அவன் கண்களில் புது ஒளியைக் கண்டேன். "நாச்சி சாதாரணமான பெண்ணல்ல, தெய்வம்! மனிதத்தெய்வம்!! அவளைப்போய் சந்தேகித்தேனே, பாவி நான்?" என்று வருந்தினன், நல்லான்.

"சாமி! எப்படியாவது, என் நாச்சியையும் வரதனையும் காப்பாற்றிவிடுங்கள். இந்தத் திருட்டு வழக்கிலிருந்து காப்பாற்றி விடுங்கள்"

"அதுபற்றித்தான் யோசிக்கிறேன், நல்லான்"

"இதுக்கு என்னங்க. யோசனை? உங்களுக்குத்தான் எல்லா விபரங்களும் தெரியுமே!"

"எனக்குத் தெரிந்தால்...கோர்ட் ஒப்புக்கொள்ள வேண்டாம்?"

"ஏங்க, ஒப்புக்கொள்ளாது?"

"ஏன், ஒப்புக்கொள்ளாதா! நல்லான், உண்மைகளை அப்படியே நம்புவதாயிருந்தால், உன்னை ஏன், கோர்ட்டு, ஜெயிலுக்கு அனுப்பிற்று? அதை யோசித்துப்பார்! கதறினதாகச் சொன்னாயே, கொலைக் குற்றம் சுமத்தப்பட்டபோது. காதுகொடுத்துக் கேட்டோர், யார்? கோர்ட்டுகளுக்கு, சட்டமும் சாட்சியங்களும்தான் முக்கியம்"

"அப்படியென்றால், அந்த நிரபராதிகளுக்கு விடுதலையே கிடைக்காதா?"

"பார்ப்போம்!"

என்று பதிலளித்துவிட்டு, நல்ல வக்கீலை அமர்த்துவதற்காகப் புறப்பட்டேன். போகும் வழியில் 'மாஜி' மாஜிஸ்திரேட் மருதவாணரைப் பார்த்தால், என்ன? — என்றோர் எண்ணம் உண்டாயிற்று. நல்லானையும், அழைத்துக்கொண்டு கிளம்பினேன், அவரிடம். ஓய்வாக உட்கார்ந்துகொண்டிருந்தார். அவர். போனதும், "யார்? என்ன விஷயம்?" என்று கேட்டார். அவர் காட்டிய அன்பு, தெம்பு ஊட்டியது. எனக்கு. 'கடிகாரக்கதை'யை அவரிடம் சொன்னேன். சொல்லச் சொல்ல, அவருடைய கண் கலங்கலாயிற்று. ஐயமணி—நாச்சி—நல்லான்—சுப்பி—வரதன், ஆகியோரைப் பற்றிய சகல விபரங்களையும் தெரிவித்தேன். பெருமூச்சு விட்டாரே யொழிய, எதுவும் பேசவில்லை! முகமெல்லாம் வியர்வை மயம். வேதனை படர்ந்தது, அவர் முகத்தில். கடைசியில், என்னைப் பார்த்துக்கொண்டே சொன்னார்.

"இவ்வளவுக்கும் நான்தான் காரணம்; நான்தான் காரணம். ஐயோ, இப்படியெல்லாம் வருமென்று நினைக்கவில்லையே, நான். ஏழைகளையும், அனாதைகளையும் அலைக்கழிக்கவா அந்தக் கடிகாரம் பயன்பட்டிருக்கவேண்டும்? பயன்பட்டிருக்கவேணடும்?" என்று அலறினார். அவ்வளவுதான். மார்பைப் பிடித்துக்கொண்டு சாய்ந்தார். திடுக்கிட்டோம், நானும் நல்லானும். ஓடிவந்தான், வேலைக்காரன். டாக்டரை அழைத்துக்கொண்டு வந்தான். அடிக்கடி வருகின்ற மார்புவலி, ஏதோ அதிர்ச்சியான விஷயத்தைக் கேள்விப்பட்டதும், வந்துவிட்டதாகச் சொன்னார், டாக்டர். நெடுநேரம் இருந்தோம். டாக்டர், அவருக்கு எவ்விதச் சிந்தனையும் வருமாறு இருக்கக்கூடாது என்று சொல்லி, ஊசி போட்டுவிட்டுப் போய்விட்டார். அதனால், சுய நினைவுகூட இல்லாமல் தூங்கிக்கொண்டிருந்தார். ஏமாற்றமும் கலக்கமும் கலக்க, இருவரும் திரும்பினோம்.

மறுநாள், கோர்ட்டில் வழக்கு. குற்றம் சுமத்தப்பட்டிருந்த வரதனும் நாச்சியும் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள். வழக்குக்கு நானே சாட்சி. இன்னொரு சாட்சி, சிங்காரமடத்து ஜகத்குரு! கோர்ட்டில், வரதனையும் நாச்சியையும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான், நல்லான். 'ஹெட் கான்ஸ்டேபிள்' மாணிக்கத்தைப் பார்த்து, ஜகத்குரு ஐயமணி வருகிறாரா?' என்று கேட்டேன். "அவரு, எப்படிங்க இங்கேயெல்லாம் வருவாரு. சாதாரணத் திருட்டுக் கேசுதானே. கடிகாரம், மடத்துக்குச் சொந்தமா என்று கேட்கப்போனோம். ஆமாம் —என்று சொன்னார்கள். அது எப்படித் திருட்டுப் போயிற்று—எப்போது திருட்டுப் போயிற்று என்கிற விபரங்கள் தேவைப்பட்டது; போய்க் கேட்டோம், ஜகத்குருவை ......"

"யார் ஐயமணியையா?"

"ஆமாம், ஜகத்குருவை"

"என்ன சொன்னார்?"

"யாரோ ஒரு வேலைக்காரி இருந்தாளாம், மடத்தில். அவள் திருடிக்கொண்டு போயிருக்கக்கூடும், என்று தெரிவித்தார். யார் அந்த வேலைக்காரி என்று கேட்டோம். அதெல்லாம் எனக்குத் தெரியாது என்று மடத்து மானேஜரை அனுப்பியிருக்கிறார்.......அவரைத்தான் சாட்சியாகப் போட்டிருக்கிறோம்." என்றான், மாணிக்கம். ஐயமணி, வரவில்லை! இத்தனை அலங்கோலத்துக்கும் யார் காரணமோ, அவனை நீதிமன்றம்கூட விட்டுவிட்டது!! நிரபராதிகளான இவர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்—இந்த வழக்கில், சகலமும் அறிந்த நானும், சாட்சியாக வேறு நிற்கவேண்டியிருக்கிறது. எப்படியிருக்கும் எனக்கு!!

வழக்கு ஆரம்பமாயிற்று. சர்க்கார் வக்கில், வழக்கைச் சுருக்கமாகச் சொன்னார். பிறகு, சாட்சிகளை விசாரிப்பதாகச் சொல்லி, என்னைக் கூப்பிட்டார்கள், கூண்டு ஏறினேன். சர்க்கார் வக்கில் கேட்டார் "உங்களிடம் அடகுவைப்

பதற்காக இந்தக் கடிகாரத்தைக் கொண்டு வந்தது யார்?"

வரதனைச் சுட்டிக்காட்டினேன், நரன்! என் சாட்சியம் முடிந்தது!

சப்இன்ஸ்பெக்டர் விசாரிக்கப் பட்டபோது, என் கடையில் ஏற்பட்ட கலவரம், அதுசம்பந்தமாக வரதனையும் வள்ளியையும் கைது செய்தது ஆகியவைகளைச் சொன்னர்.

மட மானேஜரும், விசாரிக்கப்பட்டார். கூண்டிலேறியதும், "நான் சொல்லுவதெல்லாம் கடவுள்மேல் ஆணையாக உண்மையென்று சொல்லுங்கள்'' என்றார் கோர்ட்டு குமாஸ்தா.

அப்படியே, சொன்னர்.

பிறகு, மாணிக்கம் என்னிடம் சொன்னதுபோல, மடத்தில் ஒரு வேலைக்காரியிருந்தது, அவள் கடிகாரத்தைத் திருடிக்கொண்டு வந்தது ஆகிய விபரங்களைச் சொன்னர். "அந்த வேலைக்காரி யார்?" என்று கேட்டபோது, "இதோ இருக்கிருளே, இவள் தான்!" என்று நாச்சியைச் சுட்டிக் காட்டினர், மட மானேஜர்.

எனக்குள், ஒரு எரிமலை வெடிப்பதைக் கண்டேன். நாச்சி, மடத்தில் வேலைக்காரியாக இருந்தாளாம்! அவள் கடிகாரத்தைத் திருடி வரதனிடம் கொடுத்துவிட்டாளாம்!

என்ன அக்கிரமம்!—

"இல்லை! இல்லை!" என்று கதறினள், நாச்சி.

"சைலன்ஸ்!" என்று மேஜையைத் தட்டினர், மாஜிஸ்திரேட்.

என் அருகிலிருந்த நல்லானைப் பார்த்தேன்! அந்தக்கோர்ட்டு—மட மானேஜர் — வக்கில், எல்லோரையுமே பஸ்மம் ஆக்கிவிடுவதுபோல இருந்தது, அவன் தோற்றம். அவனைக் கெட்டியாகப் பிடித்துகொண்டேன்.

மாஜிஸ்திரேட், குற்றப்பத்திரிகையை வாசித்தார்.

"சிங்காரமடத்துக்குச் சொந்தமான கடிகாரத்தை அங்கே வேலைக்காரியாகயிருந்த வள்ளி, திருடிக்கொண்டுவந்து, தன் புருஷன் மூலம் விற்க முயற்சித்தாள். அவள்மீது திருட்டுக் குற்றமும், அவள் புருஷன் மீது திருடிய பொருளை விற்க முயற்சித்த குற்றமும் சுமத்தப்படுகிறது!

இல்லை! இல்லை!! பொய்! பொய்!! —என்று, நான் எவ்வளவோ அடக்கியும், எனக்கு அருகிலிருந்த நல்லான், அலறிவிட்டான்.

"யாரிவன்?" என்றார் மாஜிஸ்திரேட்.

"பைத்தியம்!"—என்று சொல்லியபடியே, சப் இன்ஸ்பெக்டர், போலீஸ்காரர்களைப் பார்த்தார். அவர்கள், நல்லானை இழுத்துப் போய் கோர்ட்டுக்கு வெளியே தள்ளினர்.

என்னல் என்ன செய்யமுடியும்? என்னையும் மீறி, கண்கலங்கிற்று— கோர்ட்டுக்கு வெளியே வந்து, கண்ணைத் துடைத்துக்கொண்டேன். அப்போது ஒரு வண்டி வந்து நிற்பதும், மாஜிஸ்திரேட் மருதவாணர் இறங்குவதும், தெரிந்தது! நம்பிக்கை மலர்ந்தது, மனதில்!! ஓடினேன், அவரிடம்.

(வளரும்)

திருக்குறள் மாநாடு

—::—

தமிழரின் தனிப்பெரு அற நூலாம் திருக்குறளின் மாண்பினை அறியவும், தமிழ்ப் பெருமக்களுக்குரிய குறள் நெறியின் சிறப்பினை உணரவும், ஏப்ரல் 24 ஞாயிறன்று காஞ்சிபுரத்தை அடுத்த வாலாஜாபாத் நகரில், திருக்குறள் மாநாடு நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

வாலாஜாபாத் தோழர் W. K. தேவராசன் அதற்கான காரியங்களைக் கவனிக்க இசைந்துள்ளார்.

சிறந்த சொற்பொழிவுகள், இன்னிசை, நாடகம் நடைபெற இருக்கின்றன.

திருக்குறள் மாநாடு நடத்தும் பொறுப்பை வாலாஜாபாத் தி. மு. கழகக்கிளை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

கண் திறக்க, காசுள் தாரீர்!

ஏழை மாணவர்களுக்கு கல்வியின் ஒளிகிடைக்கச் செய்யவேண்டுமெனும் நன்னேக்குடன், காஞ்சியில், வரும் 30—3—55 முதல் 5—4—55 வரை ஒரு வார காலத்துக்கு கலைவிழா ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. S. S. ராஜேந்திரன், D. V. நாராயணசாமி, C. R ராஜகுமாரி, லட்சுமிகாந்தம் ஆகியோரின் நாடகம் முதல் நாளும் தொடர்ந்து மனேகர், வித்தியாவதி, பீர்முகமது ஆகியோரும், எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்ரபாணி, ஜி. சகுந்தலா என்.எஸ். நாராயண பிள்ளை, ஆகியோரும், தியாகராய கல்லூரிக் கலைக்குழுவினரும், கடைசி நாளில் கலைவாணர் N. S. கிருஷ்ணன், T A. மதுரம் ஆகியோரும் கலைவிழாவில் கலந்து கொள்ளுகின்றனர். செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் லோபோபிரபு, சுயம்பிரகாசம் M. L. A. T. சண்முகம் M. L. A. S. தெய்வசிகாமணி M. L. A. A, கோவிந்தசாமி M.L.A. ஈ. வி. கே. சம்பத், அண்ணுத்துரை ஆகியோர் ஒவ்வொரு நாளும் தலைமைவகிக்கின்றனர். இந்தப் பணி, ஒரு நல்நோக்கத்துக்காகச் செய்யப்படுவதாகும்! எனவே ஒவ்வொருவரும் தம்மாலியன்ற அளவு உதவிசெய்து, ஏழை மாணவர்களின் துயர் போக்க செய்யப்படும் இந்த சீரிய பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டுகிறேம். அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலைவிட ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தல், கோடிபெறும் என்றார், கவியரசர். அத்தகைய பணிக்கு, காஞ்சி வாழ்வோரே! நல் மனம் படைத்தோரே! இயன்றளவு உதவுங்கள் என்று, கலைவிழா அமைப்பாளர்களின் சார்பில், வேண்டிக்கொள்ளுகிறேம்.

கண்ணற்றவர் தந்த புது ஒளி!

[உடுமலையான்]

"சில சமயங்களில் வாரியணைத்து என் தாயார் முத்தங்கள் தருவாள் அடுத்த கணத்தில் வெறுப்போடு ஒதுக்கித் தள்ளுவாள். நான் செய்வதற்கு அனுமதிக்கப்படாத செயல்களைச் செய்வதற்கு என் தம்பிமார்களுக்கும் தங்கைமார்களுக்கும் அனுமதி கொடுத்து விடுவாள். இதைத் தெரிந்து என் நெஞ்சு கொதிக்கும். பிறகு கொஞ்ச நேரத்தில் கொதிப்பு அடங்கி, மௌனமாக உட்கார்ந்து கொண்டே மனவேதனையை அனுபவிப்பேன். பிறகு தான் தெரிந்தது, என் உடன் பிறந்தவர்கள் பார்க்கும் விஷயங்களை நான் பார்க்க முடியாத நிலையில் இருந்தேன் என்பது."

தங்கச் சிலைகளைப் போல் பிறந்த பதினொரு குழந்தைகளாக இருந்த 'பெரிய குடும்பம்' அவர்களுடையது. ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தபோது அழகான முகத்தில் ஒளி நிறைந்த கண்கள் இருக்கத்தான் செய்தன. நீலவானையும், நீள்கடல், நல்ல நிலம், வெளிகாற்றையும் கண்டு குழந்தை மனம் ரசித்தது. குறுகுறு நடைபோட்டு சிறுகை நீட்டி, அம்புலியையும் 'ஆட வா' என்றழைத்த காலமும் இருந்தது. ஆனால் மூன்று வயது வந்ததுமே என்ன காரணத்தாலோ கண் பார்வை போய்விட்டது!!

* * *

எகிப்து நாட்டுப் பேரறிஞன் **டாஹா ஹுசேன்**, சுயசரிதத்தில் கூறிய வாசகங்களே இவை.

பள்ளிக்கூடத்திற்கு நடப்பதற்குக் கூட உடலில் பலம் இல்லாமல் இருந்ததாம் அவருக்கு. அண்ணன்மார்கள் இருவர், ஒருவர்மாற்றி ஒருவர் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டுபோய் பள்ளியில் இறக்கி விடுவார்கள். பார்வை பழுதாகி, கண்களே இல்லை என்று சொல்லுகிற நிலையிலே இருந்தும்கூட வெகு திறமையாகப்படித்தார். பள்ளிஆசிரியர் சொல்லித் தந்தவை எல்லாம் அப்படியே மனதில் பதிந்தன. குரான் முழுவதும அப்போதே இவருக்கு மனப்பாடம். வாழ்க்கையின் உதயத்தில் ஏற்பட்ட இந்தக்குறைபாடு—இவர் மேற்கொண்ட எந்த எதிர்கால நடவடிக்கைகளையும் பாதித்ததாகத் தெரியவில்லை.

அவர் குருடர்தான், இருந்தாலும் குவலயத்தினர் மறக்க முடியாத சாதனைகளைச் செய்து அழியாத புகழ் பெற்றுவிட்டார்.

பார்வை இல்லைஅவருக்கு. ஆனாலும் சகல எகிப்தியர்களுடைய பார்வையும் அவர்பால் திரும்பியது பிறகு.

1889ல் எகிப்தில் மஹாகா என்ற சிற்றூரில் பிறந்த ஹுசேன், கெய்ரோசர்வகலாசாலையில்சேர்ந்து படித்தார். நகரத்தின் நெடுவீதிகளிலும், பெரும் கட்டிடங்களின் நடுவிலும் நடந்துபோகும்போதும் இனம் தெரியாத ஒருவித பயம், இவரைக் கப்பிக்கொண்டது. ஒரு நாள் கலாசாலைப்பேராசிரியர் இவருக்கு திறமையை மெச்சுகிற ரீதியில் ஒரு விருந்து வைத்தார். அழைப்பைக் கேட்டதும் ஹுசேன் நடுநடுங்கிப் போனாராம்.உடலெல்லாம்வியர்த்து விட்டது. விருந்துக்கு வந்தவர்கள் எல்லோருமே தன்னையே இமை மூடாமல் பார்த்துப் பேசுவதுபோல ஒரு உணர்வு இவருக்கு ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட கை நடுக்கத்தில் பதார்த்தங்களெல்லாம் உடைகளின் மேல் சிந்திக்கொண்ட ரசமான தகவலையும் அவரே எழுதியிருக்கிறார்.

அந்தக் காலத்தில் கெய்ரோ சர்வகலாசாலை பழமைவிரும்பிகளின்கூடாரமாக இருந்தது. மனிதனை மூடதனத்திற்கு முடுக்கிக் கொண்டு போகிற தத்துவங்களும் படிப்பு முறையும் ஹுசேனுக்குப் பிடிக்கவில்லை. புதுமைநாடி கிளர்ந்தெழுந்த உள்ளம், ஏன், எதற்கு என்ற கேள்விகளைக் கேட்டது. நம்நாட்டுக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இருக்கும் பழைமையின் பாதுகாவலர்கள் போலவே அங்கும் சீறினர், பேசினர், ஏசினர். ஹுசேன் கலாசாலையிலிருந்து விலகி வேறு கலாசாலைக்குப் போனார். பத்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த அராபியக் கவிஞன் அபுல் ஆலாவைப்பற்றிய ஒருஆராய்ச்சிக்காக டாக்டர் பட்டம் 1914—ல் தரப்பட்டது. சர்வகலாசாலையிலேயே, ஒரு விளக்காகத்திகழ்ந்த காரணத்தால், மேல்படிப்புக்கு ஹுசேனை பாரிஸுக்கு சர்வகலாசாலையினர் அனுப்பி வைத்தனர். 1918—ல் அங்கும் டாக்டர் பட்டம் பெற்றார். டாக்டர் பட்டத்தோடு ஒரு பாவையும் இவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் கிட்டினாள்.

சுஜானி பிரேஸா என்ற பிரெஞ்சு யுவதியின் மேல் ஹுசேன் காதல் கொண்டார். காதலுக்குக் கண்ணில்லை என்பார்களல்லவா? கண்ணில்லாத இவரை அந்தக் கடைக்கண்ணழகி களிப்போடு 1917ல் மணம் செய்து கொண்டாள். இருவரும் எகிப்து திரும்பினார்கள். இன்பமூட்டும் இல்லாளாக மட்டுமல்லாமல், பிரெஸா வழிகாட்டியாகவும் ஆசானாகவும் பணி புரிந்தாள். கணவனுக்குப் படித்துச் சொல்லுதல் சொல்லுவதை எழுதிக் கொடுத்தல் முதலிய உதவியும் புரிந்தாள். ஹுசேனுடைய 'குடும்ப விளக்கு' பலவழிகளிலும் இவருக்கு ஒளி தந்தது.

எகிப்து சர்வகலாசாலையில் அராபிய இலக்கியப் பேராசிரியராக ஹுசேன் நியமிக்கப்பட்டார். அராபிய இலக்கியங்களையும் காவியச் செல்வங்களையும் விஞ்ஞான ரீதியில் துருவிப் பார்த்து பகுத்தறிந்து பயிலும் பழக்கத்தைப் புகுத்தியவர் இவர்தான். அராபியக் கலாச்சாரத்தில் புதைந்து கிடந்த பொய்மைக் கருத்துகளைச் சுட்டிக் காட்டி, உண்மையை சலித்து எடுத்து வகுப்பு அறைகளிலும், தன் நூல்களிலும் ஹுசேன் வெளியிட்டார்.

உண்மையை யாருமே சுலபத்தில் ஒத்துக்கொள்வது மனித சரித்திரத்திலேயே கிடையாது. பொய்யையும், கற்பனையையும் 'வியாபாரச் சரக்காக்கி'க் கொழுக்கும் பழமையின் பாதுகாவலர்களுக்கு கோபம் வரத்தான் செய்யும். எகிப்திலும் அதுவே நடந்தது. அராபியப் பண்பாட்டில் இருக்கும் கொள்கைகளும் கோட்பாடுகளும் நம்பத்தகுந்தவை யல்ல, உண்மைக்குப் புறம்பானவை, கால நிலைக்கு ஒத்துவராதவை என்ற கருத்துகளை வலியுறுத்தி, 1927ல் ஹுசேன் ஒரு புத்தகம் வெளியிட்டார்.

இங்கு நமது நூல்களை கண்டதும் சில சமயங்களில் சிலருக்கு வரும் ‘காய்ச்சலைப்’போல், அங்கும் ஹுசேனுடைய புத்தகத்திற்கு. அவனைவிட்டு வைப்பதா; ஒழித்துக் கட்டவேண்டும் என்று மதவாதிகளும் ஆணவக்காரர்களும் கிளம்பினார்கள். ஆனால் ஹுசேன் தன் குரலை அடக்கவில்லை. பண்பாட்டைப் பற்றி மட்டுமல்ல, அரசியலில் ஒரு ஜனநாயக நீதி வழுவாத அரசு முறை தேவை என்றும் குரல் கொடுத்தார். வகுப்பு அறைகளிலும் பத்திரிகைகளிலும் அந்தக் குரலை வெளியிட்டார். 1930ல் எகிப்தில் பதவிக்கு வந்த சர்க்கார் கல்வித் துறையில் உள்ள சுதந்திரத்தைப் பறிக்க முயன்றபோது, ஹுசேன் பகிரங்கமாகவே சர்க்காரை எதிர்த்தார். பலன் எல்லா லட்சியவாதிகளுக்கும் ஏற்படுவது போலத்தான். சர்வகலாசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டார். அதை அடுத்த நான்காண்டு காலம் ஹுசேன் பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. உயிரை வாட்டும் பசியும், உடலை வாட்டுகிற சிறைச்சாலைப்பயமும் இவருடைய நிழலாகிவிட்டன. 1936ல் மீண்டும் எகிப்தில் சுதந்திரம் நிலைநாட்டப்பட்டதும் ஹுசேன் சர்வகலாசாலையில் கலைத்துறைத் தலைவராக அமர்த்தப்பட்டார்.

இந்தச் சமயத்தில் எல்லா எகிப்தியக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்ற தனது நெடுநாளைய ஆசையை நிறைவேற்ற முயன்றார். இதைக் கண்டதும் சிலர் கோபங் கொண்டனர். எல்லோருக்கும் சர்க்கார் இது மாதிரி ‘வசதி’யைத் தரமுடியாது என்று சர்க்காரின் ‘பாதந்தாங்கி’கள் முணுமுணுத்தனர். இதைக் கேட்டதும் ஹுசேன் வெகு கோபப்பட்டார். கல்வி என்பது சூரிய வெளிச்சத்தையும் சுத்தக் காற்றையும் போன்றது. தேவைப்படுபவர்களுக்கு அதை கிடைக்கும்படி செய்வதே ஒரு நாகரீக சமூகத்தின் கடமை” என்று ஹுசேன் முழக்கினார். 1940ல் கல்வி இலாகாவில் கலாசாரப் பகுதியின் டைரக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டு பின் இரண்டாண்டுகள் சென்ற பின்னர் ஆலோசகராக உயர்த்தப்பட்டார். 1943ல் இவருடைய முயற்சியால் ஆரம்பக் கல்விக்கான கட்டணங்களெல்லாம் ஒழிக்கபபட்டு, ‘கல்வி நீரோடை’ இலவசமாயிற்று.

1942–ல் அலெக்ஸாண்ட்ரியா சர்வகலாசாலையை ஏற்படுத்தி அதன் நிர்வாகியாகவும் பதவி ஏற்றார். ஆனால் இந்தப் பதவி அதிக நாட்கள் நீடித்திருக்கவில்லை. 1945ல் எகிப்தில் மீண்டும் சர்க்கார் மாறிற்று. புதிய சர்க்கார் ஹுசேனைப் பதவியிலிருந்து விலக்கிற்று. அவரோடு வாய்ப் பேச்சு பேசினாலேயே, பேசுபவருக்கு ஆபத்து என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஒரு பத்திரிகை ஆரம்பித்து, அதன் மூலம் ஜனநாயகத்திற்கும் நீதிக்கும் போராடினார். ஆனால் சர்க்காருடைய ‘கண்ணோட்டம்’ அந்தப் பத்திரிகை மீது பாய்ந்து, அதை தடைசெய்தது.

1950ல் எகிப்தில் மீண்டும் புது சர்க்கார் பதவிக்கு வந்தது. ஹுசேன் கல்வி மந்திரியாக நியமிக்கப்பட்டார். இந்த சந்தர்ப்பத்தில் பனிரெண்டு வயது வரைக்கும் எல்லோருக்கும் இலவசக் கல்வி கிடைக்குமாறு ஏற்பாடு செய்தார். இதன் பெரும் பயனை இப்போது எகிப்தியக் குழந்தைகள் அனுபவிக்கின்றன. கிழக்கு நாடுகளுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் உள்ள கலாசார முட்டுக்கட்டைகளை நீக்க ஹுசேன் அரும்பாடுபட்டார். ஆங்கில, பிரெஞ்சு, கலாசார நூல்களை அராபிய மொழியில் மாற்றுவதற்கும் ஏற்பாடு செய்தார். நூற்றுக் கணக்கான எகிப்திய மாணவர்களை வெளி நாடுகளுக்கு கல்வி பயில அனுப்பி வைத்தார்.

நாற்பது அருமையான புத்தகங்களை ஹுசேன் உலகத்திற்கு அளித்திருக்கிறார். எகிப்து நாடு அந்த இலக்கியச் செல்வங்களை பொன்னே போல் போற்றி வருகிறது. எகிப்திய கலாச்சாரத்தின் எதிர்காலம் என்ற புத்தகத்தில் கலாசார வளர்ச்சி கல்வி சீர்திருத்தம் ஆகியவற்றிற்கான வழிவகைகளை ஹுசேன் தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கிறார். “உலகம் பாழ்பட்டுவிட்டது” என்ற அருமையான நாவலை சமூக நீதிக்கான போராட்ட தொனியில் அருமையாக எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகம் எகிப்தில் தடைசெய்யப்பட்டது. இவருடைய வாழ்க்கைச் சரிதம் பதினைந்து ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

ஒல்லியான தோற்றம் கொண்ட இவர் எகிப்தின் சரித்திரத்திலேயே ஏற்றமான ஒரு ஸ்தானத்தை அடைந்துவிட்டார். தன் தாயகத்துக் குழந்தைகள் அனைவருக்குமே இலவசக் கல்வி தரப்படவேண்டும் என்ற உயர்ந்த லட்சியம் அவரது வாழ்க்கைக் கனவாக இருந்தது.

அந்தக் கனவு நனவாகிவிட்டது. நனவாவதற்கு அவர் கொடுத்த விலையோ சொல்லுந்தரத்ததன்று. பெரும் பல போராட்டங்கள் நடத்த வேண்டியிருந்தன. தன் தாயகத்து மக்களின் மனதில் கவ்விக்கிடந்த அறியாமை இருளை நீக்கியும் மூடக் கொள்கைகளால் தூங்கிக் கிடந்த சிந்தனை சக்தியை தூண்டித் துலக்கியும், வாழ்வின் எதிர்காலத்தை அவர்களுக்கு வசீகரமாக்கித் தந்தார்.

திராவிடத்திலும் வாழ்க்கையை வசீகரமாக்கும் உள்ள உறுதியும் லட்சிய நோக்கமும் கொண்ட நல்லவர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆனால் கண்ணிருந்தும் குருடர் என்பதுபோல் மனமிருந்தும் மார்க்கம் இருந்தும், அந்த மார்க்கத்தில் அடியெடுத்து வைக்கும் சக்தி இருந்தும், அதிகாரம் இல்லாத காரணத்தால் அடங்கிக் கிடக்க வேண்டிய அவல நிலையில் அல்லல் படவேண்டிருக்கிறது. நம் பிரச்னைகளை தீர்த்துக் கொள்வதற்கான முழு அதிகாரத்தையும் பெறுவதற்கு வழிவகுக்கும் முழக்கம்தான் திராவிடம் ,தனி நாடாக வேண்டும் என்பது. எதிர்காலத்தில் அந்த ஒரே முழக்கம்தான் எங்கும் எதிரொலிக்கவும் போகிறது. அதற்கான அறிகுறிகள் தென்பட்டுக்கொண்டே இருக்கின்றன. கண்ணற்ற ஒருவர் கல்வி நீரோடையைக் காட்டினார் எகிப்தில், மக்களுக்கு. அங்கு அவரால் முடிந்தது, நாட்டு மக்களது ஆதரவும் உதவியும் அதிகாரமும் இருந்ததால்.

நம்மிடம் எல்லாம் இருக்கிறது, செய்வதற்கான அதிகாரம் ஒன்றைத் தவிர, எது இருக்க வேண்டுமோ அதை நாம் எங்கோ வெகு தூரத்தில் ‘அடகு’ வைத்திருக்கிறோம். நாட்டு நலனின் அக்கறை கொண்டிருக்கும் நல்லவர்களும், கருத்தில் கபடமற்ற கண்ணியர்களும் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

★

அரசியற் கருத்துக்கள்

[அன்று முதல் இன்று வரை]

[பேராசிரியர் இருதயராஜ்]

ஆளுக்கு ஆள் சமுதாயத்தில் ஆணையிட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்க்கத்தான் ஒப்பந்தத்தினல் ஒருபொது அதிகாரம் ஏற்படுத்தப்படுகிறது. ஒப்பந்தத்தில் சேரும் எல்லோரும் தங்களுடைய உரிமைகளையும், அதிகாரங்களையும், தங்களையுமே சமூகத்துக்கு ஒப்படைத்து விடுகிருர்கள்—தாமாகவேயாதொரு நிர்ப்பந்தமின்றி. அதனுல் அவர்கள் ஒவ்வொருவருடைய விருப்பமும் பொதுவாக ஒன்று சேருகிறது. அன்பின் பொது விருப்பத்துக்கு மாருன தனி மனிதனின் விருபபம் ஒன்று சேருகிறது. அதன் பின் தனி மனிதன் விருப்பம் என்று ஒன்று இருக்க முடியாது. இனி பொது விருப்பம் என்றுதான் ஒன்று இருக்க முடியும். முழு சமூகத்தையும் பிரதிபலிக்கிற இந்தப் பொது விருப்பத்தில்தான் சர்வ அதிகாரமும் அடங்கி இருக்கிறது. இந்தப் பொது விருப்பத்தில் ஒவ்வொருவனுக்கும் பங்கு உண்டு என்ற முறையில் ஒவ்வொருவனும் சர்வ அதிகாரத்தில் பங்கு பெறுகிருன். ஆனுல் அரசன் பிரஜை என்ற முறையில் ஒவ்வொருவனும் சர்வ அதிகாரம் கொண்ட இந்த பொது விருப்பத்துக்கு அடங்கி நடக்கக் கடமைப்பட்டவன். இப்படித்தான் ஒப்பந்தத்தில் சேரும் ஒவ்வொருவருக்கும் இரண்டு உறவுகள் உண்டு. ஒரு வகையில் அவன் ஆட்சி செய்யும் சர்வ அதிகாரம் படைத்த பொது விருப்பத்தில் பங்கு கொண்டவன். அதாவது அவன் அந்த உறவில் அரசை ஆளுகின்றவன். மற்றொன்று அவன் ஒப்பந்தத்தின் விளைவாக அரசியல் ஒரு பிரஜை என்று ஆகிறதால் அந்தப் பொது விருப்பத்துக்கு அடங்கிக்கிடக்க வேண்டும். அதாவது ரூசோவின் கருத்துப்படி; ஒவ்வொருவனும் அரசின் கட்டளைகளைத் தன்னுடைய கட்டளைகளாக நினைக்கவேண்டும். தானே கட்டளையிட்டதாகக்கருதவேண்டும் அதே நேரத்தில் தான் பிரஜை என்ற முறையில் அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டும். மற்றவர்களும் கீழ்ப்படியும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

பொது விருப்பம் என்பது என்ன? ஒவ்வொருவருக்கும் விருப்பு, வெறுப்புக்கள் உண்டு. பலர் ஒன்று சேர்ந்து தங்கள் விருப்பு வெறுப்புக்களைக் கூட்டிப் பார்த்தால் ஒருவருக்கு விருப்பாயிருப்பது மற்றவருக்கு வெறுப்பாயிருக்கும். அதுபோலவே ஒருவருடைய வெறுப்பு மற்றவருடைய விருப்பாயிருக்கும். ஆனுல் ரூசோ சொல்லுகிருர்—ஒரு சில விருப்பங்கள்—எல்லோருக்கும் பொதுவானதாக, ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்த விருப்பங்கள் சேர்ந்துதான் பொது விருப்பம் என்ருகிறது என்பதாக.

புதிதாக ஒரு காரியத்தை முடிவுக்கு எடுத்துக்கொள்ளும்போது அதில் பொது விருப்பம் என்ன என்று எப்படிக் கண்டு பிடிப்பது என்ற கேள்விக்கு ரூசோ சொல்லுகிருர். ஒப்பந்தம் ஏற்படுவதற்குத் தான் எல்லோருடைய விருப்பமும் ஒரேமாதிரியிருக்கவேண்டும். அதன் பின் பொது விருப்பம் என்று ஏற்படுகிறது. ஆனுல் அதற்குப் பிறகு எல்லாக் காரியத்திலும் இந்தப் பொது விருப்பம் எல்லோருடைய விருப்பத்தையும் கொண்டிருக்க முடியாது. அவ்வாறு அபிப்பிராய பேதங்கள் நடைமுறையில் ஏற்படும்போது, பெரும்பான்மையினருடைய விருப்பம் எதுவோ அதைத்தான் பொது விருப்பம் என்று கொள்ள வேண்டும். மாருக நினைக்கும் சிறுபான்மையினர், பொது விருப்பத்தைத் தெரிந்த பிறகு தங்களுடைய தனி விருப்பம் தவருனது; பொது விருப்பத்தில் தங்களுடைய உண்மையான விருப்பம் அடங்கியிருக்கிறது என்று நினைத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாகபொதுவிருப்பம் என்ற பெயரில் பெரும்பான்மையினரின் விருப்பப்படி ஒரு காரியம் செய்யப்படுகிறது. அது ஒருவனுக்குப் பிடிக்கவில்லை; அதனுல் அவன் அந்தப் பொதுவிருப்பத்தை அதாவது அரசாங்கத்தை எதிர்க்கலாமா என்ருல், அப்படிச் செய்யக் கூடாது. அந்தக் காரியம் தனக்குப் பிடிக்கவில்லை என்று அவன் நினைப்பது தவறு. தன்னுடைய மனதையே அவன் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. பொது விருப்பத்தில் அவனுடைய உண்மையான விருப்பம் அடங்கியிருக்கிறதாக நினைத்துக்கொண்டு அவன் அந்தக் காரியத்தை தானும் விரும்ப வேண்டும.

அரசாங்கம் பொது விருப்பத்தின் கருவி. அந்த அரசாங்கம் ஒருவனைத் தண்டிக்கிறது. தண்டிக்கப்படுபவனுக்கு அது விருப்பமிருக்காது. ஆனுல் பொது விருப்பத்தில் அவனுடைய விருப்பமும் அடங்கியிருக்கிறது. அதனுல் அவனுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டதில் அவனுடைய விருப்பமும் இருக்கிறது. அதனுல் தண்டனையை அவன் ஏற்றுக்கொள்ள ஏன் தயங்கவேண்டும்? தானே தனக்குக் கொடுத்துக்கொண்ட தண்டனை தானே! அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிவது என்ருல் பொது விருப்பத்துக்குக் கீழ்ப்படிவது. அதாவது தானே தனக்குக் கீழ்ப்படிவது—இவ்வாறு விளக்கம் தருகிருர் ரூசோ.

ஒப்பந்தத்தின் விளைவாக ஒரு சர்வ அதிகாரங்கொண்ட அதிபதி நியமிக்கப்படுகிருன். அவனுடைய ஆணைக்கு எல்லையே இல்லை என்று சொன்னுர் ஹாப்ஸ். ரூசோவோ வென்ருல் அதேமாதிரியான சர்வ அதிகாரம் ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்படுகிறது. உண்மைதான். ஆனுல் அது எந்தத் தனி ஒரு அதிபதியிடமும் கொடுக்கப்படுவதில்லை. சமூகத்திற்குப் பொதுவாகக் கொடுக்கப்படுகிறது என்கிருர். ஹாப்சுக்கு சர்வ அதிகாரம், அரசாங்கம், எல்லாம் ஒன்ருகத் தெரிந்தது. ஆனுல் ரூசோ சர்வ அதிகாரம் பொது விருப்பத்தில் அதாவது சமூகத்தின் கையில் இருக்கிறது. சமூகம் பார்த்து ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே அரசாங்கம் பொது விருப்பத்தின் கட்டளையை நிறைவேற்றி வைக்கும் ஒரு கருவியே. அந்த அரசாங்கம், மன்னனுலோ அல்லது பிரபுக்களாலோ அல்லது மக்களாலேயோ நடத்தப்படலாம். இந்த

அரசாங்கம் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்துக்கு மாறாக நடந்தால்; அது எந்தப்பொதுவிருப்பம் என்ற சர்வ அதிகாரியால் நியமிக்கப்பட்டதோ, அதாவது சமுதாயத்தால் நியமிக்கப்பட்டதோ அந்தப் பொது விருப்பத்துக்கும் அதாவது சமுதாயத்துக்கும் விரோதமாய் நடந்துகொண்டதாக அர்த்தம். அதனால் அந்த அரசாங்கத்தை நீக்கிவிட்டு வேறொரு அரசாங்கம் ஏற்படுத்திக்கொள்ளலாம், என்றார் ரூசோ.

பொது விருப்பம் ஒரு சமுதாயத்தில் பெரும்பான்மையோருடைய கருத்துப்படிதான் இருக்கும் என்று ரூசோ சொல்லுவது சரியானது என்று ஏற்றுக்கொண்டால் அப்பொழுது பெரும்பான்மையோர் சொல்லுவதற்கு சிறுபான்மையினர் என்றுமே அடங்கி நடக்கவேண்டும் என்கிறது. சிறுபான்மையினர் எப்பொழுதுமே தவறான கருத்தையே, அரசின் நலனுக்கு மாறான கருத்தையே கொண்டிருப்பர், பெரும்பான்மையோர் என்றுமே நாட்டு நலனைக் கருத்தில் வைத்தே செயலாற்றுவர் என்றும் சொல்லமுடியாது. சிறுபான்மையைச் சேர்ந்தவர்கள் அத்தனைபேரும் ஆற்றல் இல்லாதவர்களாயிருக்களாயிருக்க முடியாது. எப்பொழுதாவது சிறுபான்மையில் சேர்ந்த ஒருவர், உண்மையிலேயே அறிவாளியாயிருந்து நாட்டுக்கு நன்மை பயக்கும் ஒரு காரியத்தை செய்ய வேண்டுமென்று விரும்பினாலுங் கூட அவருடைய விருப்பத்தை பெரும்பான்மையினர் நிராகரிக்கக் கூடும். இதிலேதான் 'பொது விருப்பம்' என்ற ரூசோவின் கொள்கையில் அபாயம் இருக்கிறது.

இந்த அபாயத்தை ரூசோவும் அறிந்திருந்தார். பெரும்பான்மையினரின் விருப்பம்தான் எப்பொழுதும் சரியானது, நன்மை பயக்கக் கூடியது, அதுதான் சமூகத்தின் 'பொது விருப்பம்' என்பது—இப்படிச் சொன்னால் நடைமுறையில் என்ன நடக்கும் என்பது அவருக்குத் தெரியும். பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை மிரட்டவும் அடக்கிவைக்கவும் சாதகமாயிருக்கும் என்பது அவருக்குத் தெரியாமலில்லை. அதனால்தான் அவர் சிறந்த அரசு எது என்று ஆராயும்போது, மக்கள் அத்தனை பேரும் ஓரிடத்தில் ஒரே சமயத்தில் கூடித் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு, பொது விருப்பம் எது என்று கண்டு பிடிப்பதற்குச் சுலபமான நேரடி மக்களாட்சி — அதாவது கிரேக்க நாட்டில் முன்காலத்திலிருந்த நகர ராஜ்யங்களே சிறந்தவை என்று கருதினார். மக்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களில் பெரும்பான்மையினர் சொல்லுவதே பொது விருப்பம் என்று சொல்லுவது தவறு என்றும் கருதினார். எனவே நேரடி குடியரசாட்சியில்தான் பொது விருப்பத்தை சரியாகப்புரிந்துகொள்ள முடியும்.மற்ற மறைமுக பிரதிநிதித்துவ மக்களாட்சியிலெல்லாம் அது சிரமமானது என்று ரூசோவே கூறுவதினால் அவருடைய பொது விருப்பக் கொள்கை தற்கால அரசியலுக்கு அவ்வளவாகப் பயனளிப்பதாக இல்லை என்ற முடிவுக்குதான் வரவேண்டியிருக்கிறது.

மேலும் பொது விருப்பத்தின் கட்டளையை அதாவது அரசாங்கத்தின் ஆணையை ஒருவன் மீறினால் அவனைப் பலவந்தப்படுத்தி அந்த ஆணைக்குக் கீழ்ப்படியவைக்கவேண்டும் என்று ரூசோ கூறுகிறார். ஆனால் எங்கு பலாத்காரமும் அடக்கு முறையும் உலவுகிறதோ, அங்கு எப்படி உண்மையான சுதந்தரம் இருக்கமுடியும்? எனவே பொது விருப்பத்தின் அதிகாரமும் தனி மனிதனின் சுதந்தரமும் ஒன்றாக இயங்கமுடியும் என்பதைப் பலர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

1776-ம் ஆண்டு அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் தங்கள் தாய் நாடாகிய பிரிட்டனை எதிர்த்துப் போர் துவக்கின. தங்கள் விருப்பத்துக்கு விரோதமாக தங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத பிரிட்டிஷ் சட்டசபை தங்களுக்கு சட்டமியற்றி கொடுப்பதும், தங்கள் பேரில் வரிகளைச் சுமத்துவதும் நியாயமல்ல என்று காரணங் காட்டிக் கடும் போர் புரிந்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விரட்டிவிட்டார்கள் அமெரிக்கர்கள். அதன் பின் ரூசோவின் கொள்கையின்படி, ஒப்பந்தத்தின் அடிப்படையில் தங்கள் அரசியலை நிர்ணயம் செய்துகொண்டார்கள்.

வால்டேருடைய எழுத்துக்களால் குமுறிக்கொண்டிருந்தார்கள் பிரெஞ்சு மக்கள், அந்த நேரத்தில் அமெரிக்கப் போரில் பங்கெடுத்துக் கொள்ள அனுப்பப்பட்ட பிரெஞ்சு சேனை காரியம் முடிந்து திரும்பி வந்தது, அந்தப் போரில் கலந்து கொண்டிருந்த வீரர்கள் சுதந்தரம், சமத்துவம் என்ற மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே வந்தனர். அத்துடன் ரூசோவின் அரசியற் கருத்துக்கள் மக்களின் உள்ளங்களை ஊடுருவிச் சென்றன. எல்லாம் சேர்ந்து 1789-ம் ஆண்டு பிரான்சில் புரட்சி தோன்றக் காரணமாயிருந்தன. அதன் பின் நான்காண்டுகள்—நெப்போலியன் பிரான்சில் தலை தூக்குகிற வரை—ரூசோவின் கருத்துக்களே பிரான்சை ஆண்டன.

டேவிட் ஹ்யூம் 1711–1776.

பதினேழாவது நூற்றாண்டில் ரூசோவினால் உருவாக்கப்பட்ட சமுதாய ஒப்பந்தக் கொள்கைக்கு எதிர்ப்பு டேவிட் ஹ்யூம் என்பவரிடமிருந்து ஆரம்பமாகியது.

இன்ப உணர்ச்சிகளிலிருந்து எழும் இச்சைகளே மனிதனுடைய செயல்களுக்குக் காரணம். ஆராய்ந்து பார்த்து அறிவைப் பயன்படுத்தி மனிதர் எப்பொழுதும் எந்தக்காரியமும் செய்வதில்லை. நல்லதா கெட்டதா என்று எண்ணிப் பார்ப்பவர்களைவிட, ஏதாவதொன்றைச் செய்தால் தனக்கு என்ன அதனால் லாபம் என்று கணக்குப் பார்ப்பவர்கள்தான் அதிகம். அதனால் மனிதரால் ஏற்படுத்தப்படும் அமைப்புகளெல்லாம் லாபத்தைக் கருதி உண்டாக்கப்பட்டவைகளாகத்தான் இருக்க முடியும்.

சமுதாய ஒப்பந்தம் என்பது சரித்திரம் கண்ட உண்மையாயிருக்கமுடியாது. மனிதர் இயற்கை நிலையில் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில், ஏதோ ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு, அதனுடைய முக்கியத்துவத்தை அறிந்து, அதன்படி நடந்தாக வேண்டும் என்று மனதைத் திடப்படுத்திக் கொள்ளக்கூடிய அளவுக்கு புத்தியுள்ளவர்களாகவோ நல்லறிவு படைத்தவர்களாகவோ இருந்திருக்க முடியாது, இம்மாதிரி எக்காலத்திலும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாக சரித்திரம் சொல்லவில்லை.

(தொடரும்)

"சமாதானமே எங்கள் லட்சியம்"

—[: :]—

உலக மக்களிடையே சமாதான வேட்கையே மிகவும் சக்தி வாய்ந்த வேட்கையாக இருந்துவருகிறது.

சோவியத் சர்க்கார் சமாதானத்தை விரும்புகிறதென்பதும், சமாதான இலட்சியத்திற்காக அது பாடுபடுகிறதென்பதும், சர்வதேச கெடுபிடி நிலைமையைத் தணிய வைப்பதற்கும் சகல மக்களுடனும் சுமுகமான உறவுகள் உறுதிபெற்று ஓங்குவதற்கும் அது மீண்டும் மீண்டும் பணி செய்து வருகிறதென்பதும் அது மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளாலும் நிரூபிக்கப்பட்டுள்ளன, இன்றும் நிரூபிக்கப்படுகின்றன.

இதர நாடுகளுடன் நாம் உறவுகளை நிறுவிக்கொள்ளும்போது சமாதானத்தை வலிமையுறச் செய்ய வேண்டும், இதர் தேசங்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாதென்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்ற விருப்பத்தால் நாம் வழிகாட்டப்படுகிறோம். இதர நாடுகளுக்கும் நமக்கும் இடையே சர்வதேசக் கெடுபிடி நிலைமையைத் தணியச் செய்யக்கூடிய பேச்சு வார்த்தைகள் நடைபெறவேண்டுமென விரும்புகிறோம், ஒப்பந்தங்கள்ஏற்படவேண்டுமெனப் பாடுபடுகிறோம். பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற வேண்டுமென எதிர்த் தரப்பினரும் விரும்பும் பட்சத்தில் எந்தப் பேச்சு வார்த்தையும் வெற்றிபெறுமென்பது கூறாமலே விளங்கும். இன்றுள்ள நிலைமைகளில் இது ஒன்றுதான் பயனுடைய பலன்கள் தரக்கூடிய நடைமுறை சாத்தியமான வழி என்று நாங்கள் கூறுகிறோம்.

சமாதானத்தையும் பொது பந்தோபஸ்தையும் வலிமையுறச் செய்யும் கொள்கையை, சகல மக்களுடனும் நேசஉறவுகள் நிறுவிக்கொள்ளும் கொள்கையை — நடைமுறையில் சோதனை செய்யப்பட்டு முற்றிலும் சரியானதென்று நிரூபிக்கப்பட்டுள்ள இக் கொள்கையை — சோவியத் சர்க்கார் முன்பின் முரணின்றித் தொடர்ந்து பின்பற்றி வரும்.

அரசுகளிடையே சமத்துவத்தின் அடிப்படையிலும் பரஸ்பர லாபத்தின் அடிப்படையிலும் வர்த்தக உறவுகள் நிறுவப்படுவதானது, சர்வதேச நிலைமை சீரடைவதற்கும் நாடுகளிடையே உள்ள உறவுகள் மேன்மையுறுவதற்கும் அனுகூலமாயிருக்கும். ஒவ்வொரு நாடும் தன்னிடமுள்ள பொருள்களைத் தடங்கலின்றி விற்பனை செய்வதற்கும் தனக்குத் தேவையான பொருள்களை இதர நாடுகளிடமிருந்து எவ்வித பாரபட்சமுமின்றி வாங்கிக்கொள்வதற்கும் தடைகள் இருக்கக்கூடாது.

நம் நாட்டைப் பொருத்தவரையில் நாம் சகல நாடுகளுடனும்,

> சோவியத் சர்க்காரின் சமாதானக் கொள்கைபற்றி அண்மையில் அந்நாட்டின் தலைவராகப் பதவியேற்றுள்ள தோழர் **புல்கானின்** தம்முடைய சொற்பொழிவில் வெளியிட்டிருக்கிறார். 10—3—55-ல் வெளிவந்த "சோவியத்நாடு" அனுபந்தத்தில் வெளிவந்த சமாதானம் பற்றிப் பேசிய பகுதி மட்டும் தரப்பட்டிருக்கிறது.

அவற்றின் அரசாங்க அமைப்பும் சமூக அமைப்பும் எப்படியிருப்பினும், விரிவான வர்த்தகம் புரிய விரும்புகிறோம். பரஸ்பர நலன்களை மதித்து நடப்பது என்ற அடிப்படையில் நாடுகளிடையே வர்த்தகம் நடைபெறவில்லையானால், அவற்றினிடையே சுமுக உறவுகள் நிலவ முடியாதென்பது வெளிப்படை. சர்வதேச வர்த்தகத் தொடர்புகள் விரிவாக வளர்க்கப்படுவதும், முறையான, கரூரான பொருளாதார ஒத்துழைப்பு ஏற்படாதபடி தடுத்துவரும் முட்டுக்கட்டைகள் அகற்றப்படுவதும் அரசுகளிடையே உறவுகள் அபிவிருத்தியடைவதற்கு மிகவும் அனுசரணையாக இருக்கும்.

முதலாளித்துவ நாடுகளில் நல்லெண்ணமுடைய சக்திகள் இருக்கின்றன என்றும், சமாதானத்தையும் தேசங்களின் பந்தோபஸ்தையும் பாதுகாக்கும் பொருட்டு நாடுகளிடையே நிலவும் உறவுகளை மேம்பாடடையச் செய்வதற்கான வழிகளை அவை கண்டுபிடிக்கும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

சோவியத் யூனியன் சமாதானத்தை நேசிக்கிறது. யாருக்கும் அது அபாயத்தை ஏற்படுத்தவில்லை. எவரையும் தாக்கவேண்டுமென்ற எண்ணம் அதற்குக் கிடையாது. சோவியத் யூனியனுடன் அரசியல், பொருளாதார, கலாச்சார உறவுகள் கொள்ள விரும்பும் எல்லா நாடுகளுடனும் நாங்கள் அத்தகைய உறவுகளை வகுத்துக் கொள்ளவேண்டுமென ஆசைப்படுகிறோம்.

பாசிஸ்ட் ஜெர்மனியை எதிர்த்து நடைபெற்ற யுத்தத்தின்போது சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இம் மூன்று நாடுகளுக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருந்து வந்தது; பின்னர் இம்மூன்று நாடுகளுடன் பிரான்சும் சேர்ந்துகொண்டது. இந்த ஒத்துழைப்பின் மூலம் நற்பயன்கள் கைகூடின என்பதை யாரும் அறிவர். சமாதான காலமான இன்றுங்கூட இந்த ஒத்துழைப்புத் தொடர்ந்து, நடைபெற்று வரலாம். நிலைமை இன்று மாறியுள்ளதற்குக் காரணம் நாங்கள் அல்ல. அமெரிக்க சர்க்கார் இன்று பரஸ்பர நல்லுணர்வின் அடிப்படையில் நம்முடன் உறவுகளை அமைத்துக் கொள்ள முயலவில்லை; "பலத்தின் உச்சியில் நிற்ப" தென்ற கொள்கையின் அடிப்படையில் அது நம்முடன் உறவுகளை வகுக்க எத்தனிக்கிறது. இந்தக் கொள்கை அபாயகரமானது. இதனால் உறவுகள் மோசமடைகின்றனவேயன்றி, ஒத்துழைப்பு ஏற்படவில்லை. ஆயுத விஸ்தரிப்பு போட்டி வளருகிறதேயன்றி, ஆயுதச் சுருக்கம் ஏற்படவில்லை. மற்றொரு யுத்தம் மூண்டெழுமென்ற அபாயத்தை இக் கொள்கை அதிகரிக்கச் செய்கிறது.

அமெரிக்கா பின்பற்றி வரும் ஆக்கிரமிப்புக் கொள்கையையும், மற்றொரு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கு அது தயார் செய்து வருவதையும் நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. அமெரிக்காவையும் அமெரிக்காவைச் சார்ந்துள்ள நாடுகளையும் சேர்ந்த பிற்போக்காளர்கள் ஜெர்மன் இராணுவ ஆதிக்கத்திற்குப் புத்துயிர் அளிப்பதற்கும், இராணுவமயமாக்கப்பட்ட மேற்கு ஜெர்மனியை மேற்கு அரசுகளின் ஆக்கிரமிப்பு இராணுவக் கூட்டணிகளில் சேர்த்துக்கொள்வதற்கும் முயற்சி செய்கின்றனர். ஆசியாவிலும் அவர்கள் இராணுவக்

கூட்டணிகளை உருவாக்கி வருகின்றனர். சீன மக்கள் குடியரசிற்கு விரோதமாக ஆத்திரமூட்டும் இராணுவ நடவடிக்கைகளைத் தூண்டிவிடுகின்றனர். சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு வருகின்றனர்.

தைவான் பிரதேசத்தில் நிலைமையைத் தீவிரமடையச் செய்வதென்ற அபாயகரமான பாதையை அமெரிக்க சர்க்கார் மேற்கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் அது தனது இராணுவப் படைகளையும் கப்பற் படைகளையும் விமானப் படைகளையும் பெருக்கிக்கொண்டு, யுத்தத் தீயை மூட்டிவிடுவதற்கான ஒரு யுத்த கேந்திரமாகமாற்றியுள்ளது.

இவ்விஷயம் குறித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மேற்கொண்டுள்ள நிலை மிகவும் அதிசயமானதாகும். சீனாவை எதிர்த்து அமெரிக்கா எடுத்துக்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஐ. நா. ஸ்தாபனம் இது நாள் வரை கண்டிக்காமலே இருந்துவருகிறது. அமெரிக்கா தனது ஆயுதப் படைகளை தைவான்பிரதேசத்திலிருந்து உடனடியாக வாபஸ் செய்து, சீன மக்கள் குடியரசின் நியாயமான உரிமைகளைத் திரும்பவும் அதற்கு அளிக்க வேண்டுமென்று கோராமலே இருந்து வருகிறது ஐ. நா. ஸ்தாபனம். இவ்விவகாரம் குறித்து சீனசர்க்கார்கடைப்பிடிக்கும்கொள்கையை நாம் பூரணமாக ஆமோதித்து ஆதரவளிக்கிறோம். சீன மக்கள் சர்க்கார் சோவியத் மக்களின் ஆதரவையும் முற்போக்குடைய மனித குலம் அனைத்தின் ஆதரவையும் பெற்றுள்ளது; ஏனெனின் நேர்மையுடையதொரு இலட்சியத்திற்காக, தேசத்தின் கண்யத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காக அது போராடுகிறது. புனிதமான இந்த இலட்சியத்தை ஈடேறச் செய்வதில் சீன மக்கள் தமது உண்மை நண்பனான மாபெரும் சோவியத் மக்களுடைய உதவி தமக்குக் கிடைக்குமென உறுதியுடன் நம்பலாம்.

சமாதானத்தை விரும்பும் நாடுகளைச் சுற்றிலும் அமெரிக்கா வலைப்பின்னல்போல் இராணுவத் தளங்களை மென்மேலும் பரவலாக அமைத்து வருகிறது. ஆவேசமான ஆயுத விஸ்தரிப்பில் அது தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. மேலும் அது விசேஷ கவனம் செலுத்தித்தனது ஆகாயவிமானப் படைகளையும் அணுசக்தி ஆயுதங்களையும் பெருக்கிக்கொண்டு போகிறது.

சென்ற பல ஆண்டுகளாகவே அமெரிக்காவில் யுத்த ஜன்னி தலைவிரிகோலமாகத் தாண்டவமாடுகிறது. அரசியல் தலைவர்களும் இராணுவத் தலைவர்களும் இடைவிடாமல் யுத்த வெறிபிடித்த அறிக்கைகளை வெளியிட்டும், பயமுறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகின்றனர். அவர்களில் சிலர் சமாதானத்தை விரும்பும் அரசுகளுக்கு எதிரான யுத்தத்தில் அணு சக்தி ஆயுதங்களைப் பிரயோகிக்க வேண்டுமென்று பகிரங்கமாக அறைகூவல் விடுக்கும் அளவிற்குச் செல்கின்றனர்.

அணுகுண்டைத் தூக்கிவைத்துக்கொண்டு கூத்தாடும் பைத்தியக்காரர்களை நேர் பாதைக்கு வரும்படி கோருவது அவசியமாகும். உலக மக்களும் இதையேதான் கோருகிறார்கள்; எந்த நாட்டின் சர்க்காரும் இந்தக் கோரிக்கையை உதாசீனம் செய்துவிட முடியாது.

முதலாளித்துவ முகாமைச் சேர்ந்த ஆக்கிரமிப்புச் சக்திகளின் கொள்கை சம்பந்தமாக நம் மக்கள் எச்சரிக்கையுடன்தான் இருந்து வருகிறார்கள். ஆக்கிரமிப்பாளர்கள் மென்மேலும் அதிகமாக பயமுறுத்துவதின் மூலம் நம்மை மென்மேலும் பீதியடையச் செய்துவிட முடியுமென உண்மையாகவே நம்புகின்றனர் போலும். பல்வேறு வகையான பயமுறுத்தல்களையும் நாங்கள் கண்டிருக்கிறோம்; ஆனால் சோவியத் மக்கள் இந்த பயமுறுத்தல்களைக் கண்டு பீதியடைந்து விடக் கூடியவர்கள் அல்ல. ☆

காஞ்சியில் கலை விழா

(ஏழை மாணவர் உதவி நிதிக்கு)

காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில்

நாடகங்கள் இரவு 10-மணிக்கு

30—3—55 மகாராணி

செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர்
திரு. லோபோ பிரபு தலைமையில்
எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, சி. ஆர். ராஜகுமாரி, லட்சுமிகாந்தம்.

31—3—55 இன்ப நாள்

திரு. எஸ். சுப்பிரகாசம் M. L. A. தலைமையில்
மனோகர், வித்தியாவதி, பீர்முகமது.

1—4—55 ஆசை நினைவு

திரு. டி. சண்முகம் M. L. A. தலைமையில்
எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்கரபாணி, ஜி. சகுந்தலா, என். எஸ். நாராயணப்பிள்ளை.

2—4—55 பகைவனின் காதலி

திரு. எஸ். தெய்வசிகாமணி M. L. A. தலைமையில்
எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர்.

3—4—55 மணி நாட்டு கூனன்

திரு. ஏ. கோவிந்தசாமி M. L. A. தலைமையில்
தியாகராய கல்லூரி கலைக்குழு.

4—4—55 எதிர்பார்த்தது

திரு. ஈ. வி. கே. சம்பத் தலைமையில்
தியாகராய கல்லூரி கலைக்குழு

5—4—55 தளபதி

அண்ணாதுரை தலைமையில்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் நடிப்பது.

ரிசர்வ் நன்கொடைச் சீட்டு ரு. 25, ரிசர்வ் நுழைவுச் சீட்டு ரு. 10
சேர் 2—0—0, தரை 0—12—0 பெண்கள் 0—8—0.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St, Kancheepuram.